# திருக்கோயில்



மே
2002

விலை
ரூபாய் ஐந்து



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், கிராமப் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 500க்கான காசோலையை வழங்குகிறார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்



தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00


மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - வைகாசி மே 2002 | மணி 4



## சிறப்பாசிரியர்

திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி

## ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


## முகப்பு

**மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கல்யாணம்**

## பொருளடக்கம்


**அறநிலையத்துறையின் ஓராண்டுச் சாதனைகள்**
- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் பி.சி. ராமசாமி அவர்கள்

**அன்னதானம்** - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

**''சீலமார் பூசை செய்த திருத்தொண்டர்''**
- முனைவர் த. அமிர்தலிங்கம்

**''மடம் புகுநாய் போல் மயங்குகின்றாரே''**
- ''சிவஞான சித்தர்'' டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

**சான்றோன்** - கவிஞர் இரா. சமுத்திர பாண்டியன்

**திருப்புகழ் பதிப்பித்த பேராளர்** திருப்புகழ்த் தேனீ

**அருணகிரியாரது கவிகளில் முதல் திருமுறையாக வகுக்கப்பட்ட தலம் — திருப்பரங்குன்றம்**
திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

**அன்பே சிவம்** - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

**தெய்வீகத் திருமுறைகள்** - டி.எஸ். பாலு எம்.ஏ., பி.எட்.

**ஸ்ரீபுரந்தரதாசர்** - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

**குசேலரும் கண்ணனும்**
புலவர் ஏ. பரந்தாமன் எம்.ஏ., பிஎட்.





உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*




# அறநிலையத் துறையின் ஓராண்டுச் சாதனைகள்

- மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் **பி.சி. ராமசாமி** அவர்கள்
(சட்டப்பேரவையில் ஆற்றிய உரையிலிருந்து)

★ திருக்கோவில்களில் செயல் அலுவலராகப் பெண்கள் நியமிக்கப்படுவதைத் தவிர்த்திடும் பொருட்டு 1968-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சார்நிலைப் பணிகளின் சிறப்பு விதிகளில் தக்க திருத்தம் செய்யப்பட்டது. இத் திருத்த விதிகளின் படி இதுவரையிலும் செயல் அலுவலர்களாக மகளிர் நியமனம் செய்யப்படவில்லை. தற்போதுள்ள மாறிய சூழ்நிலைக்கேற்ப செயல் அலுவலர்களாக பெண்களைத் திருக்கோவில்களில் நியமிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அன்னதானத் திட்டத்திற்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் பலர் நன்கொடைகள் அளித்து வருகின்றனர். இதுவரை பெறப்பட்டுள்ள நன் கொடை ரூ. 61 லட்சத்து 4 ஆயிரத்து 712 ஆகும். 63 திருக்கோவில்களிலும் 29.4.2002 வரை 4 லட்சத்து 74 ஆயிரத்து 948 பேர் அன்னதானத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்திருக்கிறார்கள்.

★ தமிழகத்தில் - எத்தனை திருக்கோவில்கள் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது என்பதை அரசு பொறுப்பேற்றவுடன் கண்டறியப்பட்டு மூன்று ஆண்டுக் காலத்தில் இந்த திருக்கோவில்களுக்கெல்லாம் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கும் நடத்தப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்ற ஓராண்டுக்குள்ளாக மிகுதியான திருக்கோவில்களுக்கு கும்பாபிஷேகம் மாண்புமிகு முதல் அமைச்சரின் ஆணைக்கேற்ப செய்து முடிக்கப்பட்டுள்ளது.

★ இந்த அரசு பதவி ஏற்ற பிறகு 62 கோவில் திருக்குளங்கள் பழுது பார்க்கப்பட்டு உள்ளன.

திருக்கோவில்களுக்கு சொந்தமாக உள்ள 515 மரத் தேர்களில் 91 திருத்தேர்கள் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இந்த அரசு பதவியேற்ற ஓராண்டு காலத்திற்குள் 29 திருத்தேர்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளது.

★ 1991-ம் ஆண்டு புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற போது, அவரது பொறுப்பில் இந்து சமய அறநிலையத் துறை இருந்தது.

அப்போது தமிழகத்தின் மூலை முடுக்குகளில் ஒரு காலப் பூஜை கூட நடைபெறாத பல கோவில்கள் உள்ளன என்பதைக் கண்டறிந்து, அவற்றில் ஒரு வேளையாவது பூஜை நடைபெறுவதற்காக ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு நிதியை ஏற்படுத்தத் தீர்மானித்து, அந்தத் திட்டம் 1993-ம் ஆண்டு முதல் செயல்படுத்தத் தொடங்கியது.

மீண்டும் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி அமையப்பெற்றவுடன், முனைப்போடு இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2001-2002-ம் ஆண்டில் 1,000 கோவில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,063 கோவில் களுக்கு இந்த நிதியாண்டில் வைப்பு நிதி ஏற்படுத்தப்படும்.

★ சென்ற நிதியாண்டில் 1,000 திருக்கோவில்களுக்கு மின்சார இணைப்பு அளிக்கப்பட்டு, மின் விளக்குகள் ஒளிர்கின்றன. இந்த ஆண்டும் அதே போன்று மேலும் 1,000 திருக்கோவில்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்குவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 46(3)ன்படி ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள 65 திருக்கோவில்களுக்கும் அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

இதற்கென தகுதிவாய்ந்தவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

★★★

# அன்னதானம்

**- திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்**

உலகத்திலுள்ள மக்கள் வீடுபேறடைவதற்குச் சாதனமாக இருந்து உபகரிப்பது அறம் ஒன்றேயாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த சென்மத்தில் மட்டும் உதவி செய்யும். நாம் செய்யும் அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

''பொங்கார வேலையில்
வேலைவிட்டோனருள்போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது;
இடாமல் வைத்த
வங்கார மும்உங்கள் சிங்கார வீடும் மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனி வழிக்கே''

என்று நம் பரமாசாரிய மூர்த்திகளாகிய அருணகிரிநாத சுவாமிகள் உபதேசித்துள்ளார். எத்தேசத்தில், எக்குலத்தில், எந்தப் பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்யும் அறம் பின்தொடர்ந்து வரும். அதனாலன்றோ ஔவைப் பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் ''அறஞ்செய விரும்பு'' என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப் பட்டுள்ளது. அவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திர தானம், கன்னிகா தானம், சுவர்ணதானம் எனப்பலப்பல கிளைகளுண்டு, இவற்றுள் தலைசிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாகும். இதனை எல்லாச் சமயத்தவரும், எத்திறப்பட்டோரும் சங்கை இன்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சமமானது முன்னுமில்லை. பின்னுமில்லை. எதனால் அன்னதானம் உயர்ந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

ஆதலால் உயிர்கள் அன்னத்தைத்தான் முக்கிய ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும்.


குஷ்டம், க்ஷயம், சூலை முதலியவ்வைகளில் எத்துணைக்கொடிய நோய் ஒருவனுக்கு வந்து வருத்தினாலும், சில காலமாவது உயிர் வாழலாம். பசி என்னும் கொடியநோய் ஒருவனுக்கு வந்து சேர்ந்தால் சிறிது நேரமாவது உயிர் வாழமுடியுமா? பசி நோய் வந்த காலத்து எவ்வளவு சிரமம் உண்டாகிறது? கண் பஞ்சடைகிறது. காதடைக்கிறது. தலை சுற்றுகிறது. வயிறு ஒட்டிப்போகிறது. கால்கள் தடுமாறுகின்றன. அகக் கருவிகளாகிய மனஞ் சோர்வையடைகின்றன. புத்தி தடுமாறுகிறது. உயிர் துடிக்கிறது. கருவி கரணங்களெல்லாம் தத்தஞ் செயல்களினின்றுந் தவிக்கின்றன அல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகத்திலும் கிடையாதென்பது உறுதி. பசியென்னும் நோயை அன்னம் என்கிற மருந்தைக் கொடுத்து நீக்க வேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்குச் சிறிது அன்னங்கொடுக்க அதை அருந்தியவுடனே அவன் முகம் எவ்வளவு பொலிவடைகிறது. மனம் எவ்வளவு ஆனந்தத்தையடைகிறது? ஆன்மா எவ்வளவு சாந்தியடைகிறது சிந்தியுங்கள், அப்போது அன்னம் கொடுத்தவனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது? பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்த தவம் வேறு இல்லை.

ஒருவனுக்குப் பசிப்பிணி வந்தபோது, நான் போய் ஒருவரை ஒன்றுங் கேட்கமாட்டேன்; ''ஏற்பது திகழ்ச்சி'' என்று சொல்லிக் கொண்டிருந்த மானமும் நீங்குகிறது. நான் உயர்ந்த குலம், ஆசாரத்திற் சிறந்தவன், அவன் தாழ்ந்தவன் என்று பாராட்டுகிற குலமும் நீங்குகிறது. கல்வி கேள்விகளிற் சிறந்து நுண்ணிய மதியுடன் திகழ்கின்றோரது கல்வி அறிவும் மங்குகிறது; காண்பார்களது கண்களைக் கவரும் கட்டழகும் குன்றுகிறது. பொருளுடையோன் என்கிற பெருமிதமும் பெயர்கிறது; தானம் புரிகின்ற தன்மையும் தவிர்கிறது; உணர்ச்சியும் ஒழிகிறது; தேன் போன்ற இனிய சொற்களையுடைய மாதர்மேல் மனத்தை வைத்து கங்குல் பகலாய்க் கண் துஞ்சாது கலங்குகின்ற காம வேட்கையும் கடிதில் விலகுகிறது.

மானங்குலங் கல்விவண்மை அறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம.

- ஔவைப்பிராட்டியார்.

பசி இன்னும் என்னென்ன விபரீதங்களையுண்டுபண்ணுகிறது? அரிதிற் பெற்ற பிள்ளையை விற்கச்செய்கிறது. தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தூக்கிக்கல்லின் மேலறையச் செய்கிறது. எல்லாம் கடந்த ஞானிகளாக காட்டிலிருந்து கருத்தை யொடுக்கிக் கனலிடை நின்று கடுந்தவமியற்றும் முனிவர்களையும்



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

கூட காயோ கனியோ கந்த மூலங்களோ இலையோ சருகோ கிடைக்குமா என்று தேடி உண்ணச் செய்கிறது. முற்றுந் துறந்தவரையும் வீடுதேடி பிச்சை வாங்கச் செய்கிறது. விரதமுங் கிடையாது; பலமுங்கிடையாது என்று விரத நாளினுங் கூட மூன்று வேளை தலை யணைக்குப் பஞ்சடைக்கிற மாதிரி வயிற்றில் சோற்றைத் திணிக்கச் செய்கிறது. விரத மிருக்கிறவர்களை பல ஆகாரங்களாகப் பழமாகப் பாலாக வயிறுபுடைக்க உண்ணச்செய்கிறது. சிவபெருமானால் உபதேசிக்கப் பெற்ற பட்டினத்தடிகளும் பசியால் வாடி ஒருவன் வீட்டிற்கு உணவை நாடிச் செல்ல நேர்ந்தது. அவன் சுவாமிகளைத் துன்புறுத்த அக்கால் சுவாமிகள் மனம் வருந்தி,

''பூணும் படிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்<br>
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல<br>
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தை கெட்டு<br>
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே''

என்று கூறியுள்ளார். அருணகிரி சுவாமிகளும் ''நீள் பசியவிக்கக் கனபானம் வேணும்'' என்றனர். வேறொரு வழியின்றி பசி தாகத்தால் மெலிந்தவர்களை அன் போடும் அருளோடும் அன்னமீந்து ஆதரிக்க வேண்டும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அது ஒன்றுக்கு ஆயிரமாக விளைகிறதல்லவா? அது போல் ஏழைகள் வயிற்றில் கொடுத்த அன்னம், மறுமைக்கு ஆயிர மடங்காகப் பெருகி நமக்கு நன்மையை நல்குகிறது. சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணுகிறோம். அதுபோல முன் ஜென்மத் தில் செய்த நன்மையினால் நாம் இப்போது, சுகத்தை அனுபவிக்கிறோம். இப்போதும் நன்றாகப் பயிரிட்டு விளைவித்தால் அல்லவா அடுத்த வருடத்தில் கவலை யற்றிருக்கலாம். இப்போது நாம் நன்மையைச் செய்தா லல்லவா மறு பிறவியில் சுகம் பெறலாம். நாம் எவ் வளவோ பாடுபட்டு செல்வத்தைத் தேடுகிறோம். அங் ஙனம் உடல் வருந்தி சேகரித்தபொருளை இவ்விடத் திலேயே வைத்துவிட்டுப் போகலாமா? அந்தச் செல் வத்தை நல்ல சேமநிதி நிலையத்தில் (பண்டாபீஸ்) போட்டு வைத்தால் நாம் போகும் இடத்திற்கு அது உதவுமல்லவா? இப்போது நாம் தேடிய பொருளை சேமித்து வைக்க வேண்டிய இடம் யாது? எங்கு வைத் தால் ஒன்றுக்கு ஆயிரமாக வரும்? என்று ஆராய்ந்து பார்த்தால் அடியார்கள், ஏழைகள் வயிறுதான் நல்ல சேமநிதி நிலையம் (பண்டாபீஸ்). அதற்கு தலைவர் தரும தேவதை. அது எப்பொழுதும் கெடாது. ஆனால் ஏழைகள் வயிற்றில் பணமாகப் போட முடியுமா? முடியாது. பின்னர் என்ன செய்யவேண்டும்? அன்ன மாக மாற்றிப் போடவேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் அது பிறவிகள் தோறும் தொடர்ந்துகொண்டே

வரும். இப்போது ஒருவன் சுகமாக இருக்கிறான் அவனைக் கண்டு நாம் சொல்லுகிறோம். ''கொடுத்து வைத்தவன்'' என்கிறோமல்லவா? எங்கு கொடுத்து வைத்தான்? அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து அவர்கள் வயிற்றில் வைத்தான்; அது இப்போது வந்து சேருகிறது. எந்த வேலையும் செய்யாமல் சுக ஜீவியா யிருக்கிறான். பல வேலை செய்தும் கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கிடைக்காமல் சிலர் துன்புறுகிறார்கள், என்ன காரணம்? முன் பிறவியில் அறஞ்செய்யாதவர் களல்லவா? இவைகளை எல்லாம் நோக்கியே தெய்வப் புலவர்

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆன்ம திருப்தியை யுண்டுபண்ணுவது அன்னதானம் ஒன்றேயாம். இத் தகைய சிறந்த அன்னதானத்தைச் செய்து அரச செல் வத்தையடைந்த ஓர் வரலாற்றை விளக்குவாம்.

வடநாட்டில் ஒரு சிற்றூரில் தரும குணமே ஒரு வடிவெடுத்தாற்போன்ற ஓர் அம்மையார் இருந்தார். அவ்வம்மையார் தன் வீடுதேடி வந்தவர்களுக்கு எவ் வாற்றானும் பசியாற்றுவதையே முக்கிய அறமாகக் கொண்டார். நாயகன் வானாடு புகுந்த பின் தன் மக னுடன் வாழ்ந்திருந்தார். பரோபகார சிந்தையுடைய அப் பணிமொழியம்மையார் மிடியென்னும் பகையி னால் வருந்தினார். என் செய்வார் பாவம்; வருகிற அதிதிகளுக்கு அன்னங்கொடுப்பதற்கு என்செய்வே னென்று ஏங்கினார். வேறு வழியின்மையால் பிச்சை எடுத்தாவது வந்தவர்கள் பசியாற்றுவேனென்று எண்ணி னார். (திருமங்கை மன்னர் வழிப்பறிசெய்தும் அன்ன தானம் புரிந்தாரல்லவா) இவ்வாறு உன்னிய அம் மாது சிரோன்மணி ஐயமேற்பாராயினார். அதனால் வரும் அரிசியை அமுதாக்கி ஏழைகளது பசி நோயை நீக்கினார். வறியோர்களது பசியை யாற்றுவதையே உடம்பெடுத்ததன் பயனாக எண்ணினார். எளிய வர்க்குக் கொடுத்து மிகுந்த அன்னத்தை மகனும் தானும் உண்டு பசியாறினர்.

அவ்வம்மையாரது குமாரன் அன்னையை நோக்கி, ''அம்மா! தாங்கள் ஒவ்வொரு நாளும் உடல் வருந்தி, பிச்சையெடுத்துவருகிற அரிசி முழுவதையும் சமைத்துப்பசித்தவர் புசிக்கத்தருகிறாயே. கொஞ்சம் எடுத்து மிகுதி செய்து வைத்தால் பிற்காலத்திலாவது, நோய்வாய்ப் பட்ட காலத்திற்காவது உதவுமல்லவா?'' என்று கூறினான். அம்மையார் ''குழந்தாய்! பொறுமை யாகக்கேள், நமக்கு என்று சேர்க்கின்ற பொருள் நம் முடையதாக ஆகாது. பிறருக்கென்று கொடுத்தது தான் நம்முடையதாக ஆகும். வறியவர்கள் வயிறுதான் பெரிய நிலம். நமக்குக் கிடைக்கிற பொருள் முழுவதையும் ஏழைகள் வயிற்றில் வைக்க வேண்டும். வீட்டில் வைத் தால் கள்வர்கள் அபகரித்துக்கொள்வார்கள். வீட்டில் வைத்தால் அது அதிகமாகவும் பெருகாது: அதிதிகளுக் குத் தருகிற எந்த ஒரு பொருளுண்டோ அதை ஒருவரும் அபகரிக்க முடியாது. ஒன்றுக்கு ஆயிரமாக வளரும், பட்சிகளாவது மிருகங்களாவது நாளைக்கு வேண்டு மென்று சேமித்துவைக்கின்றனவா? அவைகள் எப்போ தாவது நாளைக்கு என்செய்வோமென்று நெஞ்சம் கவல் கின்றனவா? கருவுக்குள் இருக்கிற சிசுவுக்கும் கல்லுக் குள் இருக்கும் தேரைக்கும் உணவு தந்து காப்பாற்றுகிற கருணாமூர்த்தியாகிய கடவுள், உருப்பெற்ற நம்மை மட்டும் காவாதொழிவானோ? மகனே! பசியாற்று வதைக்காட்டிலும் சிறந்தபேறு வேறு கிடையாது. இதை எக்காலத்தும் மறவாதே. எனக்குப் பிறகு இதை விடாது கடைபிடித்து வருவாய்'' என்று கூறினார்.

அப்பொன் மொழிகளைக் கேட்ட குமாரன் தாயை நோக்கி ''அன்னையே! 'தாய் சொல்துறந்தால் வாசகமில்லை' என்பதை நான் நன்றாக உணர்ந்திருக் கிறேன்; நின் சொல்லே வேதமொழிகளாகும். அந்த அன்னதானத்தின் பலனை விளக்கமாகக் கூறவேண்டும் என்றான். அன்னை ''மைந்தா! அன்னதானத்தின் பலன் என்னாற் கூறுந்தரமுடையதன்று. அருங்கானகத்தில் தவமியற்றும் அருந்தவ அடிகளை சென்று வினவி யுணர்வாயாக'' என்றனள். உடனே குமாரன் தாயை வணங்கி, ''வனஞ்சென்று முனிவர்களை கண்டு கேட் டுத் தெரிந்து வருகிறேன். விடை தருவாய்'' என்றனன். அன்னை மகனைத் தனித்து வனத்திற்கனுப்ப அஞ்சினா ளெனினும், அன்னதானத்தின் பலனைத்தெரிந்து கொள் வது அவசியமென்று நினைத்து 'அருமைக் கண் மணியே! அங்ஙனமே சென்று அருந்தவ முனிவரை யடுத்து சந்தேகந் தெளிந்து வருவாய். நினக்கு வழியில் இன்னலின்றி இறைவன் காத்தருள்வான்'' என்று ஆசி கூறி அனுப்பினாள்.

அந்த இளங்குமாரன் தாயாரை மும்முறை வணங்கி அவளது பூர்ணமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு வனம் புகுந்தான். நடுக்காட்டை யடைந் தான்; கதிரவன் மேற்கடலில் மூழ்கினான்.

இருள் சூழ்ந்தது. எங்கும் மிருகங்களின் ஒலியாக இருந்தது. அன்னையின் வார்த்தையை உன்னிய தனயன் இறைவன் நம்மைக்காத்து இன்னருள் புரிவானென்று துணிந்து சிவநாமத்தையுரைத்துக் கொண்டே சென்றான். கங்குலானபடியால் எங்கு தங்குவதென்று அறியாது இடர்ப்பட்டான். அக்கால் அங்கோர் பரண் புலப் பட்டது. (பரண் என்றால் விலங்குகளினால் துன்பம் நேராத வண்ணம் பூமிக்குமேல் உயரத்தில் கட்டிக் கொண்டிருக்கும் சிறுவீடு) அதனருகே சென்றான். அப் பரணில் ஒரு வேடன்தன் பத்தினியுடன் வாழ்ந்து கொண்

டிருந்தான். பகலெல்லாம் வேட்டையாடி வேண்டிய உணவைத் தேடிவந்து இரவில் அதன் மீது தன் மனைவியுடன் நித்திரை புரிவது வழக்கம். பரண் மீதிருந்த வேடன் பரணை நாடி வரும் இளங்குமரனைக் கண்ணுற்று இறும்பூதுற்றான். ''மிருகங்கள் சஞ்சரிக்கும் இப்பெருங்கானகத்தில் பொழுதுபட்ட இந்தச்சமயத்தில் இங்கு வருகின்ற இந்த இளமகன் யாவனோ?'' எனக் கீழே இறங்கி, அந்தக் குமரனை எடுத்து அணைத்து ''குழந்தாய்! என்னே நின் மனத்துணிவு? ஆயுதபாணிகளும் பகலில்கூட இவ்விடம் வர அஞ்சுவார்களே! நீயோ இளம் பிள்ளை, இரவு வந்த இந்தச்சமயத்தில் இக்காட்டகத்திற்கு எதைக் கருதி நண்ணினாய்? மிருகங்கள் உன்னை உபத்திரவம் புரியவில்லையா? எவ்வாறு துஷ்ட மிருகங்களினின்று நீ தப்பித்துக் கொண்டு வந்தாய்? நின் உறைவிடம் யாது? அறிய விரும்புகிறேன். நின்னைப் பாதுகாக்க் என் மனம் பரிதவிக்கிறது. விரைவிற் பகருவாய்'' என்றனன்.

அது கேட்ட குமாரன் ''ஐயா! நினது பரிவுக்கு மிகவும் மகிழ்கிறேன். புலன்களையடக்கி நலம்பெறத் தவமியற்றும் மாதவரைக் காண வந்தேன். தாய் போல் பரிந்து தமர் போன்று உபசரிக்கும் தயாளுவாகிய நின்னைக் கண்டு, இன்னல் தீர்ந்தேன்'' என்றனன். வேடன் ''குழந்தாய்! சந்தோஷம்; நின் வரவு நல்வரவு ஆகுக. எங்களோடு நீயும் இருந்து இந்த இரவை இனிது கழிப்பாய்'' என்று தனக்கும் தன் பத்தினிக்கும் வைத்திருந்த உணவை மூன்று கூறாக ஆக்கி அப்பிள்ளைக்கு ஒரு பங்கைக் கொடுக்க எத்தனம் புரிகையில் அவ் வேடன் பத்தினியாகிய வேட்டுவமாது மிகவுஞ் சினங்கொண்டு, ''வந்தவனுக்காக என் உணவை குறைத்துக் கொள்ள மாட்டேன்; இரண்டாகப் பகிர்ந்து என்பங்கை எனக்குக் கொடுத்துவிட்டு, உன்பங்கை இஷ்டமிருந்தால் அவனுக்குக் கொடு'' என்று கூறினாள். 'வேடன் அங்ஙனமேயாகுக' என்று அந்த உணவை இரண்டாக பகிர்ந்து ஒரு பாகத்தைப் பத்தினிக்குக் கொடுத்துவிட்டுத் தன் பாகத்தை அந்தக் குமாரனுக்குப் பரிவோடு கொடுத்தான். பசித்திருந்த அந்தப் பிள்ளை வேடனால் தரப்பட்ட தேனையும் தினைமாவையும் நெருப்பில் சுட்ட கிழங்கையும் உண்டு உள்ளங்களித்தனன். வேடன் மூன்று கை தண்ணீர் பருகி உபவாசியாயிருந்தான்.

பின்னர், வேடன் ''அப்பா! கீழே படுத்தால் மிருகங்கள் கொன்றுவிடும்; இப்பரண் மீது ஏறிப் படுப்பாய்'' என்று அச்சிறுவனை பரண்மீதேற்றி தனக்கும் தன் பத்தினிக்கும் மத்தியில் படுக்கவைத்தான். வேடன் மனைவி அதுகண்டு கோபித்து, ''இவன் என் பக்கத்தில் படுக்கக்கூடாது! பாதியிடத்தை எனக்குக் கொடுத்துவிட்டு மற்றைப் பாதியிடத்தில் அவனும் நீயும் படுத்துக்கொள்!'' என்றாள். வேடன் அவளது துர்க்குணத்தை நினைத்து நெஞ்சம் புண்ணாகி, பாதியிடத்திலே பத்தினி பக்கத்தில் தான் படுத்துக்கொண்டு சிறுவனை ஓரத்திற் படுக்கவைத்து, தூக்கத்தில் விழா வண்ணம், சிறுவனைக் கரத்தால் அணைத்துக் கொண்டு தூங்காது விழித்துக் கொண்டிருந்தான். வேடன் மனைவியும் சிறுவனும் தூங்கி விட்டார்கள். நடுராத்திரியாயிற்று. வேடன் தன் பத்தினி தூங்கிவிட்டதைப் பார்த்து, அச் சிறுவனை நடுவில் மெல்லப்படுக்கவைத்து விட்டுத் தான் ஓரத்தில் படுத்து நித்திரை செய்தான். வேடப்பெண் நித்திரை தெளிந்தாள். எங்கிருந்தோ வந்த பையனுக்கு தன் உணவைக் கொடுத்துவிட்டுத் தன் கணவன் பட்டினி கிடப்பதை நினைத்து ''இந்தப்பையன் இருந்தால் நமக்கு இடைஞ்சல், இவனைக் கீழே தள்ளி விட வேண்டும்'' என்று தீர்மானித்தாள், இருளானபடியால் தன் சமீபத்தில் படுத்திருக்கிறது நாயகன்தான் என்று எண்ணி ஓரத்தில் படுத்திருந்த நாயகனை மெல்ல உருட்டி விட்டாள். நன்றாக தூங்கிக்கொண்டிருந்த வேடன் கீழே விழுந்தான். பரணடியிற் காத்துக்கொண்டிருந்த மிருகங்கள் அவ்வுத்தமனான வேடுவனை வாயில் போட்டுக்கொண்டன. வேடன் மனைவி 'நம்மைப் பிடித்த சனியன் தொலைந்தது' என்று உள்ளம் உவந்தாள்.

பொழுது புலர்ந்தது. குயில்கள் கூவின. வேட்டுவமாது கண் விழித்து எழுந்தாள்; தன் பக்கத்தில் சிறுவன் படுத்திருக்கக்ண்டு ''நம் பக்கத்தில் நாயகனல்லவா படுத்திருந்தான்; இச் சிறுவன் எப்படி நம் பக்கம் வந்தான்'' என்று அலறினாள். நம்முடைய கெடுமதி நம்மையே கெடுத்தது என்று கூக்குரலிட்டாள். சிறுவன் எழுந்து நிகழ்ந்ததை யுணர்ந்து உளம் வருந்தி ''ஏ பாவி! உத்தமனான வேடனைக் கொன்றனையே, என்னே நின் மூட மதி? சீ உன்முகத்தில் விழித்தாலும் தீமை வரும்'' என்று வெறுத்து, அங்கிருந்து புறப்பட்டு நீராடி தவ முனிவரைத் தேடிக்கொண்டு செல்வானாயினான். ஓர் தபோவனத்தை யணுகினான். குளிர்ந்த காற்றும், நறுமலர் வாடையும் மணல் மேடையும் இருக்கக்கண்டு அச் சோலையில் நுழைந்தான். ஆங்கோர் தாமரைத்தடாகக் கரையில் பர்ணசாலையில் சித்திரப்பதுமை போல் நின்று தவம் புரியும் ஓர் முனிபுங்கவரைக் கண்டான். கண்ணுங்கருத்துங்களிகூர்ந்தான். கைகூப்பி நின்று கொண்டிருந்தான்.

நெடுநேரத்திற்குப் பின் முனிவர் கண்விழித்தார். எதிரில் அஞ்சலியஸ்தனாக நிற்கும் இளஞ் சிறுவனைக் கண்டார். ஆசி கூறினார். வந்த காரணம் யாதென வினவினார். சிறுவன் பெரியார் தாள்மீது வீழ்ந்து, 'மாதவரே! அன்னதானத்தின் மகிமையைக் கூற வேண்டுமென்று'' விண்ணப்பம் புரிந்தான். முனிவர் மகிழ்ந்து ''பிள்ளாய்! நின்கேள்வி மிகவும் அருமையானது; அதனை யான் கூறுதற்குச் சக்தியற்றவனாயுளேன். அன்னதானத்தின் பலனை நீ உணர்ந்துகொள்ள வேண்டு



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் அன்னதான உண்டியலில் காணிக்கை செலுத்துகிறார்கள்.

மென்று பெரிதும் விழைகிறாய். ஆதலால் நீ காசி நகரத்தை யரசாளுகின்ற மன்னனுக்குப் பத்து மாதங் கழித்து காலை 6 மணிக்கு ஓர் ஆண் மகவு தோன்றப் போகிறது. நீ சென்று குழந்தை பிறந்தவுடனே கை படாமல் தங்கத் தட்டில் ஏந்தி வரச்செய்து இச்சந்தேகத்தை வினவுதி; அக் குழந்தை தெளிவாகக் கூறும். ஐயம் வேண்டாம். செல்லுதி'' என்றனர்.

சிறுவன் அப்பெரியவர் வார்த்தையை சிரமேற் கொண்டு மீண்டும் அவரை வணங்கிவிடை பெற்று காசியம்பதியை நண்ணி மன்னவன் மாப்பேரவைக்குச் சென்றனன். அச்சிறுவனை அரசன் வரவேற்று ''நீ எங்கிருந்து வருகிறாய்? நின் விருப்பம் யாது? கூறுக!'' என்றனன். குமாரன் ''கொற்றவா நினக்கு ஓர் ஆண் மகவு பிறக்கப்போகிறது,'' என்று கூறி அக்குழந்தை பிறக்கும் காலத்தையும் குறிப்பிட்டான். மன்னன் கேட்டு வியப்புற்று, அக்குழந்தை யுதிக்கும் வரை அச்சிறுவனுக்கு உணவு முதலியன தந்து உபசரித்து வந்தான்.

பின்னர் குறிப்பிட்ட காலத்தில் மன்னன் மனைவி ஓர் அழகிய ஆண்மகவைப் பெற்றனள். மன்னன் கட்டளைப்படி தாதிகள் கைபடாமல் குழந்தையைத் தங்கத்தட்டில் ஏந்தி வந்தார்கள். பூர்ண சந்திரன் போல் அக்குழந்தையின் முகம் பொலிவுற்று விளங்கியது. முனிவர் அருளால் அக்குழந்தைக்கும் பூர்வ ஞானம் வந்தது. குழந்தை, வந்த சிறுவனை நோக்கிப் புன்முறுவல் கண்டு, ''அப்பா! சேமமா? இங்கு எதை உத்தேசித்து வந்தாய்? நினக்கு யாது சந்தேகம்? விரைவில் கூறுக'' என்றது. ஆண்டிருந்தோர் அனைவரும் பிறந்த குழந்தை பேசுவதைக் கண்டு பேராச்சரியம் அடைந்தனர். சிறுவனும் முன்பின் பார்த்தது போல் இக் குழந்தை குசலப்ரச்னம் புரிகிறதே என்று வியப்புற்றுக் குழந்தையை நோக்கி ''அன்னதானத்தின் பலனைக் கூறவேண்டும்'' என்றனன்.

குழந்தை ''அப்பா! நான் முன் ஜென்மத்தில் காட்டில் வேடனாக இருந்தேன். நீ என்னிடம் வந்தாய். நினக்கு இடம் தந்து நான் உண்ணுகின்ற அற்ப உணவை உனக்குத்தந்தேன். நீ உண்டு மகிழ்ந்தாய். பசித்துவந்த நினக்குச்சிறிது உணவு தந்ததன் பயன் தாழ்ந்த பிறப்பாகிய வேட சரீரம் நீங்கி உத்தம குலத்தில் நல்ல சேத்திரத்தில் மன்னனுக்கு மகனாக உலகை அரசாளப் பிறந்தேன் என்றால் சதா காலமும் பலருக்கு அன்னதானம் புரிகின்ற அன்னையின் பெருமையை யானோ உரைக்குந் தகதியன்? எனக்கு அஃது எளிதோ? அன்னதானத்தின் சிறப்பை நீயே ஆராய்ந்தறிக' என்று கூறி வாய் மூடிற்று. அது கேட்ட மன்னன் முதலிய அனைவரும் அதிசயமுற்றனர்.

சிறுவன் அதுகேட்டு அளவற்ற மகிழ்ச்சியை யடைந்தான். மன்னன் அச்சிறுவனை நோக்கி, ''மஹாநுபாவா! நின்னால் நாங்கள் கேட்பதற்கு அருமையான அன்னதானத்தின் பலனைக் கேட்டு மகிழ்ந்தோம். ஆவி ஈடேறும் வழி அன்னதானமே என்று உணர்ந்தோம்.'' எனக் கூறி வேண்டிய தனத்தைத் தந்து ஓர் தேரிலேற்றி, தக்க துணையுடன் அவன் தாயிடம் அனுப்பினான். இவ்வளவு சிறப்புடன் சென்ற சிறுவன் தன் ஊர் சென்று தாயார் திருவடியில் வீழ்ந்து நிகழ்ந்தன யாவும் கூறினான். அவ்வுத்தமி கேட்டு மனமகிழ்ந்து மகன் கொணர்ந்த செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பசியாற்றும் அன்னதானத்திலேயே செலவழித்து மகனுடன் அன்னதானத்தை இடைவிடாது புரிந்து இனிது வாழ்ந்தனள்.

★ ★ ★

# "சீலமார் பூசை செய்த திருத்தொண்டர்"

- முனைவர் த. அமிர்தலிங்கம்

(அடியாருக்கு அமுது படைத்து குபேரருக்குத் தலைவர் ஆன இளையான் குடி மாற நாயனார் அருள் வரலாறு)

''மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்''

என்று கூறுகின்றார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

இத்தகைய புண்ணியம் மிக்க அமுதுபடைத்தல் அறத்தை மேற்கொண்ட நாயனாரை ''சீலமார் பூசை செய்த திருத்தொண்டர்'' என வும், ''அன்பர் பூசை அளித்த அன்பர்'' எனவும் அழைத்துச் சிறப்பிக்கின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

அடியார்க்கு அமுது படைத்தல் ஆகிய புண்ணிய அறத்தால் பெரும் சிறப்புப் பெற்ற இளையான்குடி மாற நாயனார் வரலாற்றையே இங்கு விரிவாகக் காணப் போகின்றோம் நாம்.

இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில் 'பரமக்குடி' என அழைக்கப் பெறும் நகரின் வட கிழக்கில் விளங்கும் சிற்றூர்தான் 'இளையான்குடி' எனும் ஊராகும். இவ்வூரில் தோன்றிச் சிறந்த சிவ பக்தராகத் திகழ்ந்தவர் தாம் இளையான்குடி மாற நாயனார்.

தம் இல்லத்திற்கு வருகை தரும் சிவனடியார் யாவர் ஆயினும் அவர்களை எதிர்கொண்டு வணங்கி வரவேற்று, அவர்கள் சிந்தை குளிர அன்பு மொழிகள் கூறிச் சிறந்த ஆசனத்தில் அமர்த்திப் பாதபூசை செய்து, அறுசுவை விருந்து படைக்கும் அண்டர் நாயகரின் தொண்டராகத் திகழ்ந்த ''வேளாளர் குலத்தோன்றல்'' நம் இளையான்குடி மாறநாயனாரின் பெருமையைச் சேக்கிழார் பெருமான் பற்பல பாடல்களில் மிக விவரித்துக் கூறிப் போற்றுகின்றார்.

''அம்பொன் நீடிய அம்பலத் தினில்
ஆடுவார் அடிசூடுவார்
தம்பிரான் அடிமைத் திறத்து உயர்
சால்பின் மேன்மை தரித்துளார்
நம்புவாய்மையில் நீடு சூத்திர
நல்குலம் செய்தவத் தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார்
இளையான் குடிப்பதி மாறனார்.''

''ஏரின் மல்கு வளத்தினால் வரும்
எல்லை இல்லது ஓர் செல்வமும்
நீரின் மல்கிய வேணியார் அடி
யார்திறத்து நிறைந்தது ஓர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்ற நீடுபயன் கொள்வார்''


''ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பது ஓர் தன்மையால்
நேர வந்தவர் யாவர் ஆயினும்
நித்தம் ஆகிய பத்திமுன்
கூரவந்து எதிர்கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப் புலத்து
ஈரம் மென் மதுரப் பதம் பரிவு
எய்தமுன் உரை செய்தபின்''

''கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்து இடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்புஇலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார்!''

என வரும் பெரியபுராணப் பாடல்கள், இளையான் குடி மாற நாயனார் பக்தியுடன் அமுது படைத்த பான்மையை நம் கண்முன் காட்சியாகப் படைத்திடக் காணுகின்றோம்.

''உண்டி நாலுவிதத்தில்'' என்பது உண்ணல், தின்னல், நக்கல், பருகல் எனும் நாலுவகையான உணவு களைக் குறிப்பதாகும்.

இளையான்குடி மாறநாயனார் இல்லத்திற்கு சிவனடியார்கள் அளவில்லாமல் ஒவ்வொருநாளும் வந்து அமுது அருந்திச் சென்றார்கள். அன்னதானப்



பலனாய் இளையான்குடி மாறநாயனாரும் குபேரனைப் போலச் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து இருந்தார் என்று உவகை பொங்கக் கூறுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

''ஆளும் நாயகர் அன்பர் ஆனவர்
அளவு இலார் உளம் மகிழவே
நாளும் நாளும் நிறைந்து வந்து
நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதியின் பரப்பு நெருங்கு
செல்வம் நிலாவி, எண்
தோளினார் அளகைக்கு இருத்திய
தோழனார் என வாழும்நாள்''

என வரும் பாடலைக் காண்க.

இவ்வாறு செல்வக் குபேரராகச் சிறப்புற்று இருந்த இளையான்குடி மாற நாயனார் மேல் கண்ணேறு பட்டுவிட்டது.

''அவருக்கு என்ன? குபேரர். அளவிற்கு மேல் செல்வம் உள்ளது. அச்செருக்கினால் சிவனடியார் களுக்கு அமுது படைக்கிறார். செல்வம் இருக்கும் பொழுது அமுது படைப்பதில் பெருமை இல்லை. வறுமை வாட்டினால் அப்பொழுதும் அமுது படைப் பாரா? அப்படிப் படைத்தால் அன்றைக்கு அவருடைய அறத்தைப் பாராட்டலாம்'' எனச் சிலர் அவரை எள்ளி நகையாடவும் செய்தனர்.

இதனைக் கண்ணுற்ற தில்லையம்பலவர் செல்வம் இல்லாத வறுமையிலும் கூட சிவனடியாருக்கு அமுது படைக்க வல்ல மன உறுதி மிக்கவரே மாற நாயனர் எஜ 4தூன்ப ★ஐ 4தூதை 5தூஉ ★ஐ 4தூலகோ யில் குபேரராகத் திகழ்ந்தவரை விரைவில் குசேலராக மாற்றித் ''திருவிளையாடல்'' புரிந்து விட்டார்.

''செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வது அன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதிலும்
வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாள்தொறும் மாறிவந்து
ஒல்லை இவ் வறுமைப்பதம் புக
உன்னினார் தில்லை மன்னினார்.''

வளங்கள் சுருங்கி வறுமை மிகுந்த போதும் இளையான்குடி மாறநாயனார் தம் மனம் சுருங்காமல் தம்மிடம் இருந்த நிலபுலங்கள் ஒவ்வொன்றாக விற்று விற்று அன்னதானத் திருப்பணியை மனமகிழ்ச்சி யோடு ஆற்றி வந்தார். மாறநாயனாரின் மன உறுதியைக் குறிப்பிடும் நம் சேக்கிழார் பெருமான்

''இன்னவாறு வளம் சுருங்கவும்
எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல்
இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள
கடன்கள் தன்னை கொண்டுபின்
முன்னை மாறில் திருப்பணிக்கண்
முதிர்ந்த கொள்கையர் ஆயினார்''

என்று சோதனையிலும் சாதனை படைத்தாரே தவிர அன்னதானத் திருப்பணியிலிருந்து அவர் மாறிவிட வில்லை என்று தெளிவு படுத்துகின்றார்.

நாளடைவில் வறுமை - கொடிய வறுமையாக வறட்சியாக மாறி வாட்டுகின்றது மாறநாயனாரை; அவருடைய வீட்டில் ''அன்னதானம்'' அறப்பணி செய்வதற்கு வேண்டிய பாத்திரங்களும் பண்டங்களும் இல்லாத வறட்சி நிலை வாட்டுகின்றது. இதனைக் கூறவரும் சேக்கிழார்

''ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையார்
ஆயினார்''

என்று சுட்டிக் கூறியுள்ளதில் ஒரு நயமும் உள்ளது. ஏனம் என்றால் பாத்திரம் என்று பொருள்; அன்னம் என்பது உணவைக் குறிப்பது. பாத்திரங்களும், உணவும் அருகிவிட்ட நிலையில் கொடிய வறுமையில் வாடி னார் இளையான்குடி நாயனார் என்பது ஒரு பொருள்.

**இன்னொரு பொருள்:** *ஏனம் என்பது பன்றியைக்* குறிப்பது, அன்னம் என்றால் அன்னப் பறவையைக் குறிப்பது. திருமால் பன்றியாகியும், பிரம்மா அன்னம் ஆகியும் தேடியும் காணமுடியாத இறைவர், பாத்திரமும் உணவும் கூட இல்லாத வறுமையில் வாடிய இளையான் குடி மாறநாயனார் இல்லத்திற்கு, அவர் மன உறுதியை உலகிற்கு உணர்த்தும் வகையில் நல் தவ வேடத்தவர் வேடம் கொண்டு வருகை புரியலுற்றார் என்பது இப்பாடலில் அமைந்துள்ள நயமாகும்.

இனி, அப்பாடலைக் கண்டு இன்புறுவோம்:

''மற்று அவர் செயல் இன்ன தன்மையது
ஆக, மால் அயன் ஆனஅக்
கொற்ற ஏனமும் அன்னமும்
தெரியாத கொள்கையர் ஆயினார்
பெற்றம் ஊர்வதும் இன்றி, நீடிய
பேதையாள் உடன் இன்றி ஓர்
நற்றவத்தவர் வேடமே கொடு
ஞாலம் உய்ந்திட நண்ணினார்''

சிவபெருமானார் ஏறும் ரிஷபவாகனம் தருமத் தைக் குறிப்பது; சிவபெருமானார் அங்கத்தில் பாதி யாகிய அம்மை கருணையைக் குறிப்பது; கருணை சிறிதும் இன்றித் தருமத்தையே சோதனைக்கு உட் படுத்த தவவேட வடிவில் சிவபெருமான் வந்துற்ற படியால் தம்பணிக்கு அம்மையும், ரிஷப வாகனமும் உடன் வருதல் இடையூறாம் எனக் கருதி அவற்றை விடுத்து வந்தார் எனவும் இப்பாடலில் சேக்கிழார் உணர்த்தியுள்ள நயம் நாம் உணர்ந்து மகிழத்தக்கது.

அன்னதானம் வேண்டி வந்த சிவனடியார் இளையான்குடி மாற நாயனார் இல்லம் வந்துற்ற நேரமும் ஒரு ஏடாகூடமான நேரம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வானம் கிழிந்துவிட்டதோ என அஞ்சத்தக்க அளவிற்குப் பேய்மழை பொழிந்து கொண் டிருக்கும் நள்ளிரவு நேரத்தில், எதிர்நிற்பார் கண்ணுக்குத் தெரியாத கடுமையான இருள் அச்சமூட்டும் அகால நேரத்தில் வந்து நாயனாரின் வீட்டுக் கதவைத் தட்டி நின்றார் தவவேடராய் வந்த சிவபெருமான்.

சிவனடியார் வந்துற்ற வேளை எப்படிப்பட்ட வேளை என்பதைச் சேக்கிழார் பெருமான்

''பெருகு வானம் பிறங்க மழைபொழிந்து
அருகு நாப்பண் அறிவு அரும் கங்குல்தான்
கருகு மை இருளின் கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்றது உலகு எலாம்''

''எண்ணும் இவ்வுலகத்தவர் யாவரும்
துண் எனும்படி தோன்றமுன் தோய்ந்திடில்
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம்என்று
நண்ணல் செய்யா நடுஇருள் யாமத்து''

என்று வருணித்திருக்கக் காணுகின்றோம்.

இப்படிப்பட்ட நடு இரவு நேரத்தில் இளையான் குடி மாறநாயனாரும் அவர் தம்துணைவியாருமே உணவு இன்றிப் பசி வாட்ட வாடியிருக்கும் வேளை யில்தான், சோதனை மேல் சோதனையாக சிவனடியார் வந்து அவர்தம் இல்லக் கதவைத் தட்ட, வந்த விருந் தினரை எதிர் கொள்ள வேண்டியது தம் கடமை என்ப தாக வாசப் புகழ்மாலைக்குரியவரான இளையான் குடி மாற நாயனார், வந்த விருந்தினரை எதிர் கொண்டு வரவேற்றார் எனப் பாடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசி தலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைத்தபின், பண்புஉற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன்''.

மழையில் முழுதும் நனைந்தவராய் வந்த சிவ னடியாரை மகிழ்ச்சியுடன் வரவேற்று அவருடைய திருமேனியின் ஈரத்தை நன்கு துடைத்து ஆசனத்தில் அமரச் செய்த மாற நாயனார் தம் மனைவியிடம் தபோதனர் மிகுதியான பசியுடன் வந்துள்ளார், அவருக்கு அமுது வழங்கவேண்டுமே'' என்று மனப்பதட்டத்துடன் வினவுகின்றார்.

''நமக்கு முன்பு இங்கு உணவு இலை ஆயினும்
இமக்குலக் கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம் இன்அடிசில் தகவு உற
அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே?''

என்பது மாறநாயனார் தம் மனைவியிடம் தொடுத்த வினாவாகும்.

மாறநாயனார் போற்றிடும் அன்னதான அறப் பணியில் அவருக்குச் சற்றும் குறைந்தவர் அல்ல அவ ருடைய மனைவியார். கணவனார் மனம்போல் செயற் படவல்ல மதிமந்திரியாகத் திகழும் அவர் என்ன செய்வது எனத் தெரியாமல் சற்றே திகைத்தாலும் உடனே அடியாருக்கு அமுது படைப்பதற்கு உண்டான உபாயத்தையும் தெரிவித்து மாறநாயனாரின் மனம் மகிழச் செய்துவிடுகின்றார்.

''மாது கூறுவள், 'மற்று ஒன்றும் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்று, போம்இடம் வேறுஇலை
தீதுசெய் வினையேற்கு என்செயல்? என்று.''

''செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடு வந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று
அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுற.''

வீட்டில் இருந்த விதை நெல்லைப் பகலில்தான் வயலில் விதைத்து இருந்தார்கள். ஆகவே வீட்டில் விதைநெல்லும் இல்லாத வறிய நிலை. கணவன், மனைவி இருவருமே பசியோடு உள்ள துன்பநிலை. இத்தகைய கொடிய வறுமையிலும் மாற நாயனாரின் அன்பு மனைவியார் ''வயலில் விதைத்த விதை நெல்லை வாரிக் கொண்டு வருவீர்கள் ஆனால், அடியாருக்கு அமுது படைத்தல் ஆகும்'' என்று வழி கூறுகின்றார் எனில் அவர் தம் விருந்தோம்பும் அற உள்ளம்தான் என்னே! என்னே!

மனைவி உரைத்ததைக் கேட்டவுடன் ''பெற் றோம் செல்வம்'' எனப் பெரிதும் மகிழ்ந்தவராய்ப் பெருமழையில் தலைக்கு ஒரு கூடையைக் கவிழ்த்துக் கொண்டவராய் பெருகிய அன்பானது தள்ளிக் கொண்டு முன்செல்ல, வள்ளல் உள்ளம் மிக்கவரான இளையா குடி மாற நாயனார் வழி ஒன்றும் தெரியாத அக் கொடி இரவில் தட்டுத் தடுமாறியவாறு காலினால் தடவி கொண்டே போய் தம் வயலைச் சேர்ந்து விடுகிறா முளைத்த நெல்நாற்றுகள் எல்லாம் மழையினா ஓரிடத்தில் தேங்கி நிற்க அவற்றை எல்லாம் விரைந் வாரிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்து விடுகிற இளையான்குடி மாறநாயனார்.

இளையான்குடி மாறநாயனார் பெருமை யிலும் பேரார்வத்துடன் செயல்பட்ட அன்பின் திறத்தை வியப்புடன் சேக்கிழார் பெருமான் கீழ்வரும் பாட களில் வருணித்திருக்கின்றார்.

''உள்ளம் அன்புகொண்டு ஊக்க, ஓர்பேர் இடாக்
கொள்ள முன்கவித்துக் குறியின் வழிப்
புள்உறங்கும் வயல்புகப் போயினார்
வள்ளலார் இளையான் குடி மாறனார்.''

''காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி, இடா நிறையக் கொண்டு
மேல் எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டனர்.''

மாறனாரின் வருகையை எதிர்நோக்கி வாசலி காத்திருக்கும் அவர்தம் மனைவியார் முளைநெல்ல வாங்கிச் சேற்றை அலம்புகின்றார். ''நெல்லை வறு விறகும் இல்லையே!'' என்கின்றார் அவர். உட மாறனார் தம் வீட்டுக் கூரையின் ஒரு பகுதியை அறுத் வீழ்த்தி, மூங்கில்களை எடுத்து வந்து ''இதோ விறகு என்று கூறி வழங்குகின்றார்.

அம்மூங்கில்களைக் கொண்டு அடுப்பின மூட்டி நெல்லை வறுத்து அரிசியாக்கிச் சோறு நொடியி சமைத்து விடுகிறார் மாறனாரின் மனைவியார். அ பொழுதுதான் ''கறிக்கு என்ன செய்வது?'' என்ற கவன யுண்டாகிறது அவருக்கு.

மாறநாயனார் மீண்டும் அந்தக் கும்மிருட் ஓடுகிறார் தம் வீட்டுக் கொல்லைப் புறத்திற்கு. அங் விளைந்திருக்கும் கீரைகளைப் பறித்து விரைந்து வ கொடுக்கிறார். தம் பிறவிக்குக் காரணமான வின யைப் பறித்து எடுப்பதைப் போல கீரைப்பயிற்கனை பறித்து எடுத்தார் எனச் சேக்கிழார் பெருமான் கூ யுள்ள உவமை நயமும் இங்கு எண்ணி மகிழ்த வேண்டும்.

''வழிவரும் இளைப்பினோடும்
வருந்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும்
அன்பினில் பொலிந்து சென்று

குழிநிரம்பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்து அவை கறிக்கு நல்க''

ன்பது பாடல்.

பிறவிக்குக் காரணமான வினைகளைச் சஞ்சிதம் ிராரத்தம், ஆகாமியம் என மூன்றாகக் கூறுவர். பற்பல றவிகளில் செய்து நம் கணக்கில் தொகுப்பாக ிளங்குவன சஞ்சித வினைகள். இப்பிறவியில் கழித் ாக வேண்டும் என விதிக்கப்பட்ட வினைகள் ிராரத்தம், இப்பிறவியில் புதிதாக உண்டாகும் ினைகள் ஆகாமியம். விறகுகளுக்காக வீட்டு மூங்கில் ளை அறுத்த போது மாறநாயனார்தம் சஞ்சித ினை தீர்ந்தது. முளை நெல்லை வாரிக் கொணர்ந்த போது பிராரத்தவினை தீர்ந்தது; கீரைகளைப் பறித்த போது ஆகாமிய வினையும் இன்றி அறவே வினைகள் ர்வுற்றன. ஆகவே வினைகள் தீரப் பெற்ற மாறநாயனா நம், அவர்தம் இல்லத்தரசியாரும் இறைவர் அடி சேருதல் திண்ணம் என்பதையும் இங்கு நமக்கு நன்கு தெளிவுறுத்தும் வகையில்

''பாசப் பழி முதல் பறிப்பார் போலப்
பறித்து அவை கறிக்கு நல்க''

என நயமுறப் பாடியிருக்கக் காணுகின்றோம்.

மாறநாயனார் பறித்துவந்த கீரைகளை நன்கு ஆய்ந்து, அலம்பி, தம் கைப் பக்குவத்தால் பலவகைக் கறிகளாகச் சமைக்கின்றார் அவர்தம் மனைவியார். ''அமுது தயார் ஆகிவிட்டது. இணை இலா சிவனடி யாரை அமுது செய்விப்போம்'' என்று மனைவியார் கூற, மாறநாயனாரும் பசிமயக்கத்தில் உறங்குவது போல் படுத்திருக்கும் அடியவரைத் துயில் எழுப்பு கின்றார்.

மாறநாயனார் துயில் எழுப்பத் திருமாலிற்கும் பிரம்மாவிற்கும் எவ்வாறு சோதியாகக் காட்சி அளித் தாரோ அவ்வாறே சிவபெருமான் முதலில் ஜோதியாகத் தோன்றி மாறனாருக்கும், அவர்தம் மனைவிக்கும் காட்சி வழங்குகின்றார். பின் தம் ஜோதி வடிவை மாற்றி உமையம்மையுடன் ரிஷபவாகனராய்க் காட்சி வழங்கி ''சிவனடியாருக்கு அமுது வழங்கி சீலமார் பூசை புரிந்த திருத்தொண்டனே! நீயும் உன் மனைவியும் கயிலைக்கு எழுந்தருளிக் குபேரன் தன் செல்வம் அனைத்தும் உமக்கே வழங்கி உம் கட்டளை வழி செயற்பட்டு வாழ யாம் வரம் கொடுத்தோம்'' என்று திருவருளும் புரிகின்றார்.

## அன்னதானத் திட்டத்தின் பெருமை

இந்தத் திட்டத்தை நடத்திக் காட்டுவது பெரிய பரோபகாரம். பசித்து வந்த ஏழை களுக்கும் ஈசுவரனின் கோயிலில் இப்படிப் பிரசாதம் கிடைக்கிறது என்றால் வயிறும் மனசும் குளிரும்.

- ஜகத் குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்.

இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பெரிய புராணப் பாடல்களில் எழிலுற வருணித்திருக்கக் காணலாம்.

''அழுந்திய இடருள் நீங்கி
அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்டு
அமுது செய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும்
தொண்டரும் திகைத்து நின்றார்''

''மால் அயற்கு அரிய நாதன்
வடிவுஒரு சோதி ஆகச்
சாலவே மயங்கு வார்க்குச்
சங்கரன்தான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோடு
இடப வாகனன் ஆய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த
திருத்தொண்டர் தம்மை நோக்கி

''அன்பனே! அன்பர் பூசை
அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி
இருநிதி கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி
மொழிவழி ஏவல் கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க என்றே
அருள்செய்தான் வார்க்கும் மிக்கான்.''

இளையான் குடி மாறநாயனாரின் அன்ன தான அறப்பணியைப் போற்றிக் குபேரனுக்கே தலை வன் ஆக்கினார் கயிலையம்பெருமான். இத்தகைய அன்ன தான அறப்பணியின் மகிமையை நாமும் நன்கு உணர்ந்து அன்னதானத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து இனிப்புறுவோமாக!

★★★

# “மடம்புகு நாய் போல் மயங்குகின்றாரே”

''சிவஞானச்சித்தர்'' **T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி** அவர்க
சிங்கம்பட்

''உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்போடு உயிரிடை நட்பறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே''
- திருமந்திரம்

''ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்'' - குறள்

''அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்'' - குறள்

மனிதப் பிறவி கிடைப்பது அரிது. அப்பிறவி கிடைத்த பின் நாம் ஏன் வாழ்கிறோம், எப்படி வாழ வேண்டுமென்று அறிந்து நடப்பது மிகமிக அவசியம். ''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிது அரிது காண்; இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்'' என்று தாயுமான சுவாமிகள் கூறுகிறார்.

கோசம் என்ற சொல்லிற்குச் சட்டை என்று பொருள். இந்த மனித வடிவிற்கு முதலில் நம் கண்ணிற்குத் தெரிவதெல்லாம் அன்னமய கோசம். அன்னம் உண்டால் இது இருக்கும், இல்லையேல் அழிந்துவிடும். இதை வடமொழியில் 'ஸ்தூல உடல்' என்பார்கள். முப்பத்தாறு தத்துவத்தில் இவ்வுடலில் பத்து தத்துவங்கள் இருக்கின்றன. லலாடஸ்தானம் என்று கூறப்படுகிற புருவ மத்தியிலியங்குகின்ற உயிரானது உறங்கும் போது கண்டத்திற்கு வந்துவிடுகிறது. இதை உணர்ந்து கொள்வது எப்படி?நாம் பிரயாணம் செய்யும்போது அசதியினால் உறக்கம் வந்தால் உயிரானது கண்டத்திற்கு வரப்பார்க்கும். அப்போது தலையானது வலது புறமும் இடது புறமும் சாயப்பார்க்கும். நாம் சரி செய்து உட்காரப் பார்ப்போம். தூங்கும்போது ஸ்வப்பனம் முதலான அனுபவங்கள் நாம் பெறுவது முழுவதும் சூக்கும சரீரம் கொண்டே, அப்போது சூக்கும சரீரத்தில் உள்ள அவயவங்களே செயல்படுமே தவிர ஸ்தூல உடலின் அவயவங்கள் செயலிழந்து கிடக்கும்.

விஞ்ஞானமயகோசம், ஆனந்த மயக்கோச மற்றும் மனோமயக் கோசமென்று நுண் உடல்க மூன்றையும் சேர்த்து சாஸ்திரங்கள் புரியட்ட சரீர அல்லது காரண சரீரம் என்று குறிப்பிடுகிறது. யோ தாரணையில் பிராணாயாமம் மூலம் பன்னிரண் அங்குலம் ஓடுகின்ற சுவாசத்தை ஆறு அங்குலத்திற் சுருக்கிக் கொண்டு வந்தால் கூடுவிட்டுக் கூடுபாயலா என்று அறிவாளிகள் கூறுகிறார்கள். இதைத் தழுவி திருமந்திரம் பாடிய திருமூலரையும் மற்றும் கி உருவெடுத்த அருணகிரி நாதரையும் குறிப்பாகச் செ வார்கள்.

''பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபம்தானே
யாதனா சரீரமாகி, இன்ப துன்பங்களெல்லாம்
நாதனா
ஆணை உய்க்க நரகோடு சொர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவாய் யோனி சேர்த்திடும்
ஜீவன் எல்லாம்
- சித்திய

''உண்டு நரக சுவர்க்கத்திலுள்ளன
கண்டு விடும் சூக்குமம் காரணமாச் செல்லப்
பண்டு தொடரபரகாய யோகி போல்
பிண்ட மெடுக்கும் பிறப்பு இறப்பு எய்தியே''
- திருமந்தி

நூலாசிரியர்கள் மற்றும் ஞானிகள் அவரவர் சௌகரியத்திற்கு ஏற்றவாறு இவ்வுடல்களை வெ வேறு பெயர் கொண்டு எழுதியிருப்பதால், வாச களுக்கு விளங்கும் வகையில் நாம் மூன்றாகப் பிரித் பார்ப்போம். ஸ்தூல உடல் (Physical Body) பிரா மயக்கோசம், சூக்கும சரீரம், ஸ்வப்பன உடல், மற் பல பெயர்கள் உடைய Astral Body, இவற்றுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள மூன்று உடல்கள் கொண் தான் புரியட்ட சரீரம். (Casual Body).

இறந்த உடன் நான்கு பேர் தூக்கிச் செல்லு பூத உடலை நாள் முழுவதும் சுமந்து அலைவதாலே உயிரானது சோர்வுற்று இரவு நேரங்களில் களைப்பு நீ



சிவஞானச் சித்தர்'' திருமிகு டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி அவர்களின் ஆன்மீகப் பணியின் பொன்விழாவில் திருக்கோயில்'' ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

றங்குகிறது. இறந்த உடன் ஸ்தூல உடம்பிற்குட் ட்ட பத்து தத்துவங்களிலிருந்து விடுபட்ட சூக்கும ரீரம் இருபத்தாறு தத்துவங்களுடன் செயல்படத் தாடங்குகிறது. இறந்த பதினாறு தினங்கள் நம்முட ிருந்து வருந்துகிறது. பதினாறாம் தினத்தன்று சபன்டீ ர்ணம் என்ற கிரிகைக்குப் பின் அதை மூதாதையர்கள் ந்து புவர்லோகம் அல்லது ஆவி உலகமென்றழைக்கப் டுகிற உலகத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். மூதா தயர்களுக்குச் செய்கின்ற கிரியைகளைத் தெய்வங் ளுக்குச் செய்கின்ற கிரியைகளுக்கு மாறாகச் செய் தற்குக் காரணம், நம் உலகம் சுற்றுவதற்கு எதிர்புற ாகப் புவர்லோகம் சுற்றுவதாகக் கருதுகிறார்கள்.

புவர்லோகத்திலும் சிலகாலம், பாவ புண்ணியங் ளுக்கு ஏற்ப வாழுகின்ற சூக்கும சரீரத்துடன் இருக் ின்ற உயிரானதற்குச் சூக்கும சரீரம் அங்கு அழியப் பறுகிறது. அதுவே நம்முடைய உண்மையான மரணம் னக்கொள்ளல் வேண்டும். இதன்பின் நம் விருப்பு, வறுப்பு, கோபம், தாபம் போன்ற பல குணங்களை ள்ளடக்கிய புரியட்ட சரீரத்துடன் மீண்டும் நல் ினை தீவினைப் பயன்களுக்கு ஏற்றவாறு 84 லட்ச யானி பேதங்களில் ஒன்றில் பிறக்கிறது. இப்படி த்தனை ஜென்மங்கள் இவ்வுயிர் எடுக்கின்றது ன்பது கணக்கிலடங்காத ஒன்று ''பிறவிப் பெருங்கடல் ந்துவர் நீந்தார் இறைவனடி சேரா தார்'' என்று திருவள்ளுவரும், ''எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர்பிறவி அவதாரம்'' என்று அருணகிரி நாதரும் கூறி இருப்பது உணரற்பாலது.

இதைத்தான் வள்ளுவர் பெருந்தகை இரு குறட்பாக்களில் அழகாகச் சித்தரித்திருக்கிறார்.

''உறங்கு வது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்றும்,

''குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு''

என்றும் சித்திரித்திருக்கிறார்.

அறிவாளி இப்பிறவிச் சுழலிலிருந்து விடுபட முயல வேண்டும். பிறவிக்கு மூல காரணம் ஆசை. இதனாலேயே திருவள்ளுவர்

''அவாஎன்ப எல்லா உயிருக்குமௌஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து''

என்றும்,

''அவா இல்லார்க் கில்லாகுந் துன்பம் அஃ துண்டேற்
தவாஅது மேன்மேல் வரும்''

என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

''ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசரோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே''

என்று திருமூல நாயனாரும் கூறியிருக்கிறார்.

யாருமே துன்பத்தை விரும்புவது இல்லை. ஆனால் நாம் எல்லாரும் இன்பத்திற்குப் பதிலாக இவ்வுலகில் துன்பத்தையே நுகருகிறோம். துன்பத்திற்குக் காரணம் அஞ்ஞானம். அஞ்ஞானத்தால் ஆசை வருகிறது. ஆசை வருவதால் கீழான பிறப்பு வரும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

''பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு'' - குறள்

பிறப்பு வந்தால் இறப்பு வரும். ''சாதலின் இன்னாத தில்லை'' என்று வள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

ஆகவே ஞானம் வந்தால் அஞ்ஞானம் போகும், அஞ்ஞானம் போனால் ஆசை போகும். ஆசை போனால் பிறப்பு போகும். பிறப்பு போனால் இறப்பு போகும். இறப்பு போனால் துன்பம் போகும். துன்பம் போனால் இன்பம் வரும்.

ஆகவே தான் வள்ளுவர் - ''இலக்கம் உடம்பு இடும்பைக்கே என்ற கலக்கத்தைக் கையாறா கொள்ளா தாம் மேல்'' எனக் குறிப்பிடுகிறார்.

ஞானத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்? சமையல் கற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? நல்ல சமையல்காரரை அணுக வேண்டும். அதைப் போலவே அந்தந்தத் தொழில் கற்க அந்தந்த நிபுணர்களை அணுக வேண்டும். ஆகவே ஞானத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்? ஞானமுள்ளவரை அணுக வேண்டும்.

சகல வல்லமை உடையவரும், இயல்பாகப் பாசங்களிலிருந்து விடுபட்டவரும், கருணையே வடிவமாகக் கொண்டவரும், முற்றும் உணர்ந்தவரும் யார்? ஆண்டவனைத் தவிர வேறு யாருமிலர். ஆனால் அவரை எப்படி அணுகுவது என்ற கேள்வி எழும். அதற்குப் பெரியோர்கள் வகை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். கீழே தருகிற பாடல்கள் அதற்கு வழிகாட்டியாக இருக்கின்றன. இதனை மேவியே,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்கிறார் திருவள்ளுவர் பெருந்தகை.

1. சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னசிவகதி தானே
- திருமந்திரம்

2. சிவாயநமவென்று சிந்தித்திருப்பார்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே மதி யாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும் - ஔவையார்.

3. நானேயோ தவம் செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்தடி யேற்கருள்
செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே.
- மாணிக்கவாசகர்

4. காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே. - ஞானசம்பந்தர்

5. துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின்நாடொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.
- ஞானசம்பந்தர்

### எப்போதெல்லாம் ஆண்டவனை நினைக்கலாம்?

6. இருக்கினும், நிற்கும் போதும்
இரவு கண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்தி ஊண் துய்க்கும் போதும்
முருக்கிதழ் கனிவா யாரை
முயங்கி நெஞ் சழியும் போதும்
திருக்களா வுடைய நம்பா
சிந்தை உன் பாலதாமே.
- அதிவீரபாண்டியர்

7. திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன் முன்மலர் பறித்திட்டுண்ணாராகில்

## சான்றோன்

– கவிஞர் இரா. சமுத்திரபாண்டியன், அம்பா சமுத்திரம்

தனக்கென எதுவும்
தான்விரும்பான்! எப்போதும்
தன்னிடத்தில் உள்ளதனை
தந்திட அஞ்சான்!
மனம்போல் மற்றவர்
கொடுமை செய்தாலும்
மன்னிக்கும் அன்பான
மனத்தைப் பெறுவான்!
தனம்பெற்று உயர்ந்தால்
தன்னுறவைக் காத்திடுவான்!

தன்நிலை தாழ்ந்தாலும்
தகுதிகள் இழந்திடான்!
வனத்துமர நிழல்போல்
வையகம் காத்திடுவான்
வகையில்லா கொடுமைகள்
வந்தாலும் அயரான்
சஞ்சலம் இல்லா
நெறியில் சான்றோனே!

அருநோய்கள்கெட வெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ்செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

– அப்பர்

(''தனித்திருத்தாண்டம்'' ஆறாம் திருமுறை)

சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் வீடுபேறு அடைய இருந்தாலும், லய யோகமும், ஜெப யோகமும் சிறப்புடையன. யோகத்தில் எட்டு அங்கம் முக்கியமாக உள்ளன. அதில் தாரணை என்பது இடையறாது மனதை ஆண்டவனிடம் ஈடு படுத்துவது. இந்தத் தாரணையை அடிப்படையாகக் கொண்ட குறள்தான்

''சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு''

முற்காலங்களில் ஊர்களுக்கு வடக்கேயும், தெற்கேயும் மடங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. உஞ்ச விருத்தி எடுத்துவரும் துறவிகளும், ஆண்டிகளும் இந்த மடங்களில் இரவு நேரத்தைக் கழிப்பார்கள். மீண்டும் பசி ஆற்றிக் கொள்ளலாமென்று எஞ்சிய உணவை ஓடுகளில் வைத்து அருகாமையில் படுத்துக் கொள்வார்கள். இதை அறிந்த தெருக்காட்டு நாய்கள் இரவு 11 மணிக்குப் பின், இப்போது துறவிகள் உறங்குவார்கள் என்று குடுகுடுவென அங்கு சென்று மெல்ல ஒட்டிவிருக்கும் எஞ்சிய உணவைக் களவு செய்ய வாயை வைக்கும். இதனை எதிர்நோக்கி இருக்கும் ஆண்டி பாதுகாப்பிற்கு என வைத்திருக்கும் கட்டக் கம்பை எடுத்துப் 'பளார்' என நாயின் தலையில் ஓங்கி அடிப்பார். அடிபட்ட நாய் ஓலமிட்டுக் கொண்டே ஓடும். பின் வடக்கு சென்று பயனில்லை, இனித் தெற்கு செல்ல வேண்டுமென்று நினைத்து, தெற்கே உள்ள மடத்திற்குக் குடுகுடுவென ஓடும். வடக்கு மடத்தில் நடந்தது போலவே தெற்கு மடத்திலும் இரவு ஒரு மணிக்கு நாயை எதிர் நோக்கி இருக்கிற துறவி இது சென்று வாயை வைத்ததும் அடித்து விடுவார். இத்துடன் நில்லாமல் இப்போது வடக்கு மடத்தில் எல்லாரும் அயர்ந்து உறங்குவார்களென நம்பி மீண்டும் மூன்று மணி அளவில் லொங், லொங் என்று ஓடும். அதே வரவேற்பு மீண்டும் அங்கே காத்திருக்கும். ஐந்து மணி அளவில் இவ்வளவு அனுபோகத்திற்குப் பின்னும் மீண்டும் தெற்கே செல்லும். அப்போதும் அதே நிலை தான். இவ்வாறு ஒன்றும் கிடைக்காமல் விடிந்துவிடும்.

இதைத்தான் திருமூல நாயனார், பல உடம்புகளுக்குள் கட்டுப்பட்டுள்ள உயிரானது பிறவிச் சுழலிலிருந்து விடுதலை அடைய வேண்டியதை எண்ணி அதற்கான மார்க்கத்தைத் தேடாமல், பாசத்தால் கட்டுண்டு ''மடம்புகு நாய்போல் மானிடர்கள் மயங்குகின்றாரே'' என வருந்திச் சுட்டிக் காட்டுகின்றார்.

''ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற வந்த கன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனே நின்பாதம் என்னும்
வாசக் கமலந்தலை மேல் வலிய வைத்து
ஆண்டுகொண்ட
நேசத்தை யென் சொல்வேன் ஈசர் பாகத்து
நேரிழையே''

– அபிராமி பட்டர்

ஆகவே ஜெபயோகத்தை மேற்கொண்டு பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு, இறைவன் திருவடியை அடைய முயல்வோமாக.

★★★

# திருப்புகழ்ப் பதிப்பித்த பேராளர்

– திருப்புகழ்த் தேனீ

தமிழ்நாட்டில் எண்ணில் அடங்கா நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சிலவே இன்று வரை வழக்கில் உள்ளன. சில இயற்கை சீற்றம் போன்ற வற்றால் அழிந்துபட்டன. வேறு சில மக்கள் உபயோகத் துக்கு வராது அவற்றின் பயனறியாத தனிமனிதர் கள் கையில் அகப்பட்டு எங்கோ மூலையில் முடங்கிக் கிடந்தன.

இன்று நம்மிடையே உலாவரும் கந்தப் புராணம், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் அறிஞர் சிலரது அயரா உழைப்பினால் வெளிக் கொண்டுவரப்பட்டவை யாகும்.

இது விஷயத்தில் ஆறுமுகநாவலர், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் போன்ற தமிழறிஞர்களின் சீரிய தொண்டு மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். அவ்வரிசையில் வ.த. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள் திருப்புகழ்ப் பதிப்பித்து உலகுக்கு அளித்தவர் என்பது ஒருசிலருக்கே தெரிந்த உண்மையாகும். இக்கட்டுரை அன்னாரின் வரலாற்றை ஒருவாறு எடுத்துக் கூறுகிறது. ஆதாரம் அன்னாரது திருக்குமாரர் தணிகை மணி வ.சு. செங்கல்வராயர் அவர்கள் எழுதிய திருப்புகழ்ப் பதிப்பாசிரியர் வரலாறு என்ற நூலாகும்.

வ.த. சுப்பிரமணியப்பிள்ளை சென்னையை அடுத்த செங்கல்பட்டில் தணிகையெம்பெருமானுக்கு வழிவழியடிமையான ஒரு நல்ல குடும்பத்தில் கி.பி. 1846 ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தகப்பனார் பெயர் தணிகா சலம் பிள்ளை. தாயார் பெயர் இலக்குமியம்மாள்.

சிறுவயதில் செங்கல்பட்டில் மெஷின் பள்ளி யொன்றில் படித்தார். குடும்பக் கஷ்டத்தையுணர்ந்து சரிவரப் படித்தும் மேல் வகுப்புக்களில் படிப்பதற்கு வேண்டிய பொருள் இல்லாமையால் 1863 ஆம் ஆண்டு அந்தப் பள்ளியிலேயே மாதசம்பளம் ரூ. 6க்கு ஆசிரியராக அமர்ந்தார். ஆசிரியர் தொழில் இவருக்குப் பிடிக்கவில்லை. தமது தமையனாரின் சொற்ப வரும் படியுடன் தமது சம்பளமும் குடும்பம் நடத்த தேவைப் பட்டதால் ஆசிரியர் தொழிலை விட முடியாது தவித் தார். மேற்கொண்டு தமது படிப்பைத் தொடர வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது.

இவ்வாறு குடும்பச் சூழலில் இருந்த போது சென்னை கிறிஸ்தவக் கலாசாலை உபாத்தியாயர் டாக்டர் மில்லர்துரை செங்கல்பட்டுப் பள்ளிப் பரி சோதனைக்கு வந்தார். அப்போது அவரிடம் தம் கஷ்டத்தை எடுத்துக் கூறச், சென்னைக்கு வந்தால் மெட்ரிகுலேஷன் வகுப்பில் படிப்பதற்கு வேண்டிய உதவி களை மில்லர் துரை தாம் தருவதாகக் கூறினார்.

1865ஆம் ஆண்டு மில்லர் துரை சொன்னபடியே சென்னை வந்து பள்ளி உபகாரச் சம்பளம் பெற நடத்தப்படும் பரீட்சையில் (Mackintosh Scholarship Examination) முதலாவதாகத் தேறினார்.

திருவல்லிக்கேணியில் தமது அத்தை மகன் ரத்தினப் பிள்ளையென்பவர் வீட்டில் தங்கி கிறிஸ்தவ கலாசாலையில் படிக்கத் தொடங்கினார். தமக்குக் கிடைத்த 8 ரூபா உதவிப் பணம், 4 ரூபா சாப்பாட்டுக்காக அத்தை மகனிடம் தந்து, தம் செலவுக்கு ஒரு ரூபா போக மீதி 3 ரூபா தாய்தந்தை தமையனுக்குமாகச் செலவிட்டு வந்தார்.

1866-ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் பரீட்சை யில் தேறினார். தொடர்ந்து எஃப்.ஏ. (FA) பரீட்சைக்குப் படித்து அதிலும் 1867 ஆண்டு முதல் வகுப்பில் தேறினார். சர்க்கார் வேலை ஏதும் கிடைக்காததால் மீண்டும் உபாத்தியாயர் வேலையைச் சென்னையில் 40 ரூபாய் சம்பளத்தில் சில பள்ளிகளில் செய்துவந்தார். பிறகு மில்லர் துரை பள்ளியிலேயே கிளார்க் வேலை கிடைத்தது.

1868 ஆண்டு இவருக்குத் திருமணம் ஆயிற்று. 1870 ஆண்டு மஞ்சகுப்பம் ஜில்லா கோர்ட்டில் குமாஸ்தா வேலை கிடைத்தது.

அங்கு அவர் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஒருமுறை வழக்கு ஒன்றில் சிதம்பரம் தீட்சிதர்கள் தங்கள் பெருமையைக் காட்ட மேற்கோள்களாக பல நூல்களிலிருந்து பாடல்கள் எடுத்துக் காட்டியிருந்தனர். அவற்றுள் ''தாது மாமலர் முடியாலே'' என்ற சிதம்பரம் திருப்புகழ்ப் பாட்டின்'' வேதநூல்முறை வழுவாமே தினம் வேள்வியாலெழில் புனை மூவாயிர மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே'' என்ற அடியும் இருக்கக் கண்டார். அப்பாடலின் தேனொழுகும் சந்தம்

அவர் சிந்தையைத் தொட்டதோடு திருப்புகழ் பந்தத்தையும் உண்டாக்கிவிட்டது. இத்தகைய அற்புதப் பாடல்கள் 16000 அருணகிரிநாதர் பாடியிருக்க, ஓராயிர மேனும் கிடைத்து விட்டால் தாமெடுத்த ஜன்மம் பலன் கிட்டியதாகும் என நினைத்துத் திருப்புகழ்ப் பாடல்களைச் சேகரிக்க உறுதி பூண்டார்.

டிஸ்டிரிக்ட் முனுசீப் வேலைக்குத் தகுதிபெற வேண்டிய எல்லா பரீட்சைகளிலும் தேறியிருந்தார். எனவே 1884ஆம் ஆண்டு முதல் முதல் கூடலூர் முன்சீப் (வட்டநடுவர்) வேலை பார்த்துவந்தார். 1888ஆம் ஆண்டு சேலம் ஜில்லா நாமக்கல்லுக்கு முன்சீபாக மாற்றப் பட்டார்.

இவர் உத்யோகம் காரணமாகப் பல ஊர்களுக்கு மாற்றலாகிக் கொண்டிருந்தார். ஓய்வு நாட்களில் தாம் வேலை பார்த்த இடத்திற்கு அக்கம்பக்கம் கிராமங்களுக்குச் சென்று திருப்புகழ் ஓலைச் சுவடிகள் வைத்திருப் போரிடம் கேட்டுப் பெற்றார். சிலர் மனப்பாடமாக ஒப்பித்த பாடல்களைக் கேட்டு எழுதிக்கொண்டார்.

காஞ்சிபுரம் புத்தேரித் தெரு அண்ணாமலைப் பிள்ளையென்பவர் 750 பாடல்கள் கொண்ட திருப்புகழ் ஓலைப்புத்தகம் தந்து உதவினார். பிறகு சிதம்பரத்துக்கு அடுத்த பின்னாத்தூர் சீனிவாசப் பிள்ளையென்பவர் 400 பாடல்கள் கொண்ட ஓலைப் புத்தகம் கொடுத்து உதவினார். கருங்குழி ஆறுமுக ஐயர் என்பவர் (வீர சைவர்) 900 பாடல்கள் உள்ள திருப்புகழ் புத்தகம் ஒன்று கொண்டுவந்தார். இம்மூன்று புத்தகங்களிலும் பல பாடல்கள் ஒத்திருந்தன. சிதம்பரவாத்தியார் என்பவரைக் கொண்டு இப்பாடல்கள் செம்மைப்படுத்தப் பட்டன.

இப்புனிதப் பணிபற்றி மகா மகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் தாம் எழுதிய ''என் சரித்திரம்'' என்ற நூலில் கீழ்க்கண்ட வாறு குறிப்பிட் டுள்ளார்.

அக்காலத்தில் அருணகிரிநாதர் இயற்றிய திருப் புகழ் அங்கங்கே வழங்கி வந்தது. திருப்புகழ்ச் சுவடி களைச்சிலர் வைத்திருந்தனர். அருணகிரிநாதர் வாக்கிலே ஈடுபட்ட சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழ்ப் பாடல்களைத் திரட்டி வெளியிட வேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்யத் தொடங்கினார். தாம் உத்தியோகம் பார்க்க வந்த இடங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் விசாரித்து விசாரித்துத் திருப்புகழ் பாடல்களைச் சேகரித்தார். ஏடுகளைத் தொகுத்தார்; பாடுபவர்களிடமிருந்து கேட்டு எழுதிக் கொண்டார்.

***

### தர்மம் தலைகாக்கும்

தர்மமே தலை காக்கும். பத்துத் தலை ராவணன் விழுந்து நாசமாக, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி விஜயராகவனாகத் தலை நிமிர்ந்து நின்றதற்குக் காரணம் தர்மம் தலை காத்தது தான்.

*– ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள்*

எனக்குக் கிடைத்த சில சுவடிகளை அவரிடம் கொடுத் தேன். அவர் மிகவும் சிரத்தையுடன் தொகுத்து வந்ததை யறிந்து அவர் பால் எனக்குப் பற்றுதல் உண்டாயிற்று. அவர் அடிக்கடி கடிதம் எழுதுவார். திருப்புகழைப் பதிப்பிக்கத் தொடங்கிய பின்பு ''புரூப்பை'' எனக்கு அனுப்பிவந்தார். நான் பார்த்துத் திருத்தி அனுப்புவேன். புறநானூறு பதிப்பித்து வந்த காலத்தில், இந்தத் திருப் புகழ்க் கைங்கர்யம், எனக்கு முருகப் பிரான் தியானத் தால் உண்டாகும் பயனையும் நெஞ்சத் திண்மையை யும் கிடைக்கச் செய்தது.''

இவ்விதம் சேகரித்த பாடல்களை புலவர் சிவசிதம்பர முதலியார், தமிழ்ப்பண்டிதம் சேலம் சரவணப்பிள்ளை ஆகியோரைக் கொண்டு திருத்தம் செய்து செம்மைப் படுத்தினார். இவ்விதம் கிடைத்த மொத்த பாடல்கள் 1304. அவற்றில் ஆறுபடை வீட்டுப் பாடல்கள் 450ஐ முதல் பாகமாகவும், பிறதலத்துப் பாடல்கள் 545ஐ இரண்டாம் பாகமாகவும், பொதுப் பாடல்கள் 307ஐ மூன்றாம் பாகமாகவும் பதிப்பித்தார் கள். மூன்றாம் பாகத்தில் திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி ஆகியவையும் சேர்க்கப்பட்டன.

இவ்வாறு ''திருப்புகழ்'' தொகுத்து முடித்த வ.த. சுப்பிரமணியம் பிள்ளை 1909 ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதியன்று தாம் பூண்ட உறுதியைச் செவ்வனே நிறைவேற்ற வழி வகுத்தத் தணிகையாண்டவன் திருவடியை அடைந்தார்.

''பூவருமமல னயிற்கரச் செவ்வேள்
பொன்னடி யேநினைந் துருகித்
தாவரு மருண கிரிப்பெருங் கவிஞன்
சாற்றியதிருப்புகழ் பலவும்
மேவருநிலையை யுணர்ந்தவ னருளே
மெய்த்துணை யாக்கொடு தேடி
யாவரும் பெறச் செய் சுப்பிரமணிய
ஏந்தல்சீ ர்இயம்புறற் பாற்றோ.

(- தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர்
எழுதிய சிறப்புப்பாயிரம்)

# அருணகிரியாரது கவிகளில் முதல் திருமுறையாக வகுக்கப்பட்ட தலம் - திருப்பரங்குன்றம்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

அருணகிரிப் பெருமான்தம் திருப்புகழில், முதல் திருமுறையாகிய திருப்பரங்குன்றப் பாடல்களை, ஆராயப் புகுமுன், ஆசிரியர் கையாண்ட சில அரிய தத்துவங்களை அறிந்துகொள்வது சிறப்பாகும். ஏனைய புலவர்கள், கட்டளைக்கலித் துறை, அந்தாதி, அலங் காரம் போன்ற பாடல்களைப் பாடுவதில் தேர்ச்சி அடைந்திருந்தாலும், அருணகிரியார் இதே போன்று பாடியதற்கும் உள்ள வேறுபாடு - ''படும் பாட்டை பாட்டாக பாடினார்கள் ஏனையோர்கள்; அருணகிரி யார் பாட்டை நம் மனதில் படும்படி பாடினார் - இதுதான் வேறுபாடு. தமிழில் உள்ள உயிர் மெய் எழுத்துக்களை, வல்லினம், மெல்லினம், இடையினம் என 3 வகையாக வகுத்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு மெல்லின ஓசை வரும் விதத்தில், திருப்பரங் குன்றம் பாடலாகிய-

''மன்றலங்கொந்து மிசை தெந்தெனம் தெந்தனென
வண்டினங் கண்டு தொடர் - குழல்மாதர்''

என்பதில் மெல்லின ஓசையான ''ங, ஞ, ன, ந, ம, ண'' எனும் எழுத்துக்களின் ஓசையே மிக்கு நிற்கும் விதத்தில் பாடியுள்ளது அற்புதம் என்றே கூறலாம். தனக்கென்றே ஒரு பாணியில் எதுகை மோனை இவைகளை கையாள் வதோடு அன்றி, சந்தங்கள் (நூதனமாக) அமைப்பதிலும் கைதேர்ந்தவராவார். ஆதலில் இவரை கவிராஜர் எனப் போற்றுதல் தகும். மேலே குறித்த பாடலில் ''பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந்து ஐங்கர பண்டிதன் தம்பி'' எனும் 6ஆவது அடியில் சொன்னதைச் சொல்லுகின்ற கிளிகள், வந்து வந்து ஐந்து கரபண்டிதன் தம்பி'' எனச் சொல்லுவதை எந்த அளவு ரசித்துப் பாடியுள்ளார் என் பதை அறிய முடிகிறது.


இன்றைய நாளில் நமக்கு திருப்பரங்குன்றத் தைக் குறித்து 15 பாடல்களே கிடைத்துள்ளன. திருப் பரங்குன்றத்தில் நிகழ்ந்ததாக கூறப்படும் நிகழ்ச்சியை முதலில் நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

ஒரு பழைய கதைதான். கற்கிமுகி எனும் பூதம், அவ்வூரில் சிவபூஜையில் தவறியவர்களை எல்லாம் பிடித்து, மலைக்குகையில் அடைத்து வருவது வழக்கம். 999 பேர்கள் அவ்வாறு அடைக்கப்பட்டிருந்த சமயம், மதுரை சங்கப்புலவர்களிடல் சிறந்த நக்கீரர் அம் மலையினிடத்தே வருகிறார். இவர், இறைவனிடமே, நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என வாதிட்டவர். இவர் குளக்கரையில் சிவபூஜை செய்தகாலையில், அருகிலிருந்த மரத்தின் இலை, தரையில் விழுந்த போது, பாதி இலை தண்ணீரிலும், பாதி இலை தரையிலுமாக விழுந்ததும், பறவையாக வும், மீனாகவும் மாறி, இரண்டும் ஒன்றையொன்று விடாமல் இழுத்துக்கொண்டிருந்த அதிசயத்தைக் கண்டு, மனம் மலைப்புறுகிறது. சிவபூஜையும் அதனால் தவறு கிறது. உடனே கற்கிமுகி பூதம், இவரையும் பிடித்து குகையில் அடைத்தது. 1000 பேர்கள் சேர்ந்து விட்ட உற்சாகத்தில், அவர்களை உண்பதற்கு முன், நீராடி வரச் செல்கிறது. பூதத்தின் குறிக்கோளை, குகையில் அடைத் திருந்த ஏனைய புலவர்கள் கூறக் கேட்டறிந்து, முருகனைத் துதித்துப் பாடிய பாட்டுத்தான், பத்துப் பாடலில் முதலா வதாக 'திருமுருகாற்றுப்படை' என வழங்கப்பட்டது. இதனைப் பகழிக்கூத்தர் திருச்செந்தூர் பிள்ளைத்தமிழில் பாடியிருக்கிறார்.

''ஏர் கொண்ட பொய்கைதனில்.....
நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூதம்
அதுகொண்டு போய், நீள்வரை எடுத்து அதன்
கீழ்வைக்கும்
அதுகண்டு நீதிநூல் மங்காமலே; சீர் கொண்ட
நக்கீரனைச்
சிறை விடுத்தவா, செங்கீரை ஆடி அருளே''

எனப்பாடியதிலிருந்து அறிய முடிகிறது.

இப்படி நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாட காரணமாயிருந்த குளமும், மரமும் இருந்த தலம் தான்



திருப்பரங்குன்றம். இதனைக் குறித்து அருணகிரியார் வேல்வகுப்பில்,

''பழுத்தமுது தமிழ்ப்பலகையிருக்கு மொரு
கவிப்புலவன் இசைக் குருகி வரைக் குகையை
இடித்து - வழிகாணும்''


எனக் குறிப்பிட்டு பாடியுள்ளார். இத்தலம் மதுரைக்கு தென்மேற்கே 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்குள்ள குன்றின் உயரம் சுமார் 1050 அடியாகும். இக்குன்று இயற்கையாகவே சிவலிங்க வடிவமாய் இருப்பதால், இதனைச் சிவலிங்கமாகவே கருதி வழிபடுகின்றனர்.

இங்கு வீற்றிருக்கும் மூலவர் பரங்கிரிநாதர் எனவும், துணைவியார் ஆவுடை நாயகி எனும் நாமத்தோடும் காட்சியளித்த போதிலும், இத்தலத்துக்கு முக்கியத்வம் வாய்ந்தவர் முருகனே. முருகப்பெருமான், சூரனை சம்ஹாரம் செய்தபிறகு, அதற்கு வெற்றிப் பரிசாக தேவேந்திரன் தன் மகளாகிய தேவசேனையை மணம் முடித்து கொடுத்த தலம்தான் திருப்பரங்குன்றம். இங்குள்ள முருகனிடத்துத்தான், நக்கீரர் அடியவர்களை முதலில் ஆற்றுப்படுத்தியிருக்கிறார். மதுரை, திருப்பரங்குன்றம் இரண்டையும் சேர்த்தே நக்கீரர் பாடியிருக்கிறார். இத்தலத்துக்கு, சம்பந்தரும் சுந்தரரும் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். இக்குன்றத்தில் ஒரு சித்திரச்சாலை இருந்திருக்கிறது. அதில் சூரியன் முதலிய கோள்களும், தாரகை, நாள் மீன்கள் எல்லாம் சித்திரமாக வரைந்துள்ளதாக அறியப் படுகிறது. இன்று அச்சித்திரச் சாலையை காண முடியவில்லை. திருப்பரங்குன்ற மலையை சிறிதுதூரம் ஏறிச்சென்றால், இம்மலையின் தென்பகுதியில் காசிவிசுவநாதர், விசாலாட்சி, வினாயகர், முருகர் கற்சிலை வடிவத்தில் உள்ளதைக் காணலாம். பிரம்மாவையும் பஞ்சலிங்கத்தை பூஜை பண்ணும் கோலத்தில் காண முடிகிறது. மலை அடிவாரத்தில் ஒரு குடை வரைக்கோயில் உண்டு. அதை உமையாண்டவர் கோவில் என்கின்றனர். பாறையின் பின் பக்கத்தில் நடராஜரது தாண்டவம் செதுக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம். ஆனால் எல்லாமே சிதைந்த நிலையில் உள்ளது. திருப்பரங்குன்ற ஆலயம் குடைவரை போல் இருந்தாலும், பாண்டிய மன்னர்கள் தாம் இதனை நிர்மாணித்திருக்க வேண்டும்.

★ ★ ★

# அன்பே சிவம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



அன்பிலே சிவமும் ஐக்கியம் ஆனதால்,
அன்பும், சிவமும் அவனியில் ஒன்றெனில்,
அன்பிலா மனத்தால், ஐயனைத் துதித்தால்
அன்பிலார் சிவத்தை அடையவும் முடியுமோ? 1

"உண்மை" ஒன்றே உலகில் என்றும்,
பன்மையில் ஒருமையாய், பழமையில் புதுமையாய்,
கண்களால் காண்பதாய், காணாத ஒன்றாய்,
ஒன்றிய தன்மையில் ஒழியாத ஒன்றே. 2

தன்னையே அறியத் தன்னுள் நோக்கித்,
தன்னையே "யார்"எனத் 'தன்'மனம் தேடித்,
தன்னையே அறிந்தோர் சகபதி அறிவார்,
சொன்னதை வேதம் துதிப்பதும் கடமையே. 3

அன்பைத் தேடி அலைவதால் பயன் என்?
அன்பின் உறைவிடம் அவரவர் அகமே,
அன்புடைச் சொல்லும், அன்புடைச் செயலும்,
அன்புடை வாழ்வும், ஐயனின் வாழ்வே. 4

சிவமயம் வேண்டின், சீரறிவு வேண்டாம்,
சிவமயம் வேண்டின், செல்வமும் வேண்டாம்,
சிவமாய் "உண்மை"யொடு சேர்ந்தே ஒன்றிடின்,
சிவமயம் அன்பால் சேர்ந்தே கனியுமே. 5

"உண்மை"யை உணர ஒருநிலைத் தியானம்,
உண்மையாய்த் தினமும் உணர்வோடு ஒன்றி,
"உண்மை"யைத் துதித்தால், உலகமே சொர்க்கமாய்,
'உண்மையும் அன்பும் ஒன்றிடச்சிவமே'. 6

★ ★ ★

# தெய்வீகத் திருமுறைகள்

- டி.எஸ். பாலு, எம்.ஏ., பி.எட்.

நம் தொன்மைத் தமிழ்மொழி, இசையோடு பிறந்து வளர்ந்த இன்றமிழ் மொழி ஆகும். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு, பண்ணிசைக்கு மறுமலர்ச்சி ஊட்டிய காலம். இந்தக் காலகட்டத்தில்தான் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பழந்தமிழகத்துப் பண்ணிசைக்கு உயிர் ஊட்டினர்.

சைவ சமயத்தின் இரு கண்கள் எனப் போற்றப் படுவன திருநெறிய தீந்தமிழாகிய தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமாகும். இறைவனே தோத்திரமும் சாத்திரமும் ஆனவன் என்பதைத் 'தோத்திரமும் சாத்திரமும் ஆனான் கண்டாய்' என்ற அப்பர் திருவாக்கால் அறியலாம்.

சைவ சித்தாந்தம் ஓதும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் இலக்கணத்திற்கும் சிறந்த பக்தி இலக்கியமாக விளங்குவது இப்பன்னிரு திருமுறைகளே ஆகும். சிவபிரானது அருள்பெற்ற மெய்யடியார்கள் பாடியருளிய பக்தி இலக்கியமாகிய திருமுறை அருள் இசைப் பாடல்கள் 'தமிழ் வேதம்' எனவும் அழைக்கப்பெறும்.

திருமுறைத் தீந்தமிழ்ப் பனுவல்கள் நம் மொழியின் புதிய இலக்கிய வகைகளையும் மரபுகளையும் கருத்துக்களையும் தோற்றுவித்துள்ளன. மேலும் நம் முன்னோரின் கடவுள் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்தன. கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவை தழைத்துச் செழிக்கவும் அடிப்படையாக விளங்கின. உலக பக்தி இலக்கியங்களின் வரிசையில் பெரிதும் வியந்து குறிப்பிடத்தக்க நிலையில் மிகத் தொன்மையும் பெருமையும் கொண்டவை இப்பனுவல்கள்.

## திருமுறை அமைப்பு

தெய்விகத் திருமுறைகளின் அமைப்பை நோக்குமிடத்து முதல் திருமுறை 'தோடுடைய செவியன்' என்று தொடங்கி இறைவன் உமையொரு பாகனாக இருப்பதையும், நான்காம் திருமுறை 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என இறைவன் உயிர்களுக்குச் செய்கின்ற உபகாரத்தையும், ஏழாம் திருமுறை 'எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை வைத்தாய்' என இறைவன் உணர்த்தினால் அன்றி உணரா உள்ளங்கள் என்பதையும் விளக்குவன. எட்டாம் திருமுறை முழுவதும் சிவானுபவத்திறம் செறிந்தது, ஒன்பதாம் திருமுறை அரசராகவும் சித்தராகவும் அடியாராகவும் விளங்கிய சிவானுபவச் செல்வர்களின் கனிந்த உள்ளத்து எழுந்த இசைப்பாக்களும், தாம் வாழ இறைவனை வாழ்த்தும் பல்லாண்டுமாக அமைந்தது. பத்தாம் திருமுறை 'ஒன்றவன்றானே' என்பதை முதலாகக் கொண்டு, அருள் உபதேசத்தில் தொடங்கி சூனிய சம்பாசனையை இறுதியாகக் கொண்டு சிவனருளில் திளைத்து சிவத் துதியோடு முடியும் யோக நூலாக ஞான நூலாக - ஞான நூலாக - மந்திர நூலாக அமைந்து விளங்குகின்றது.

பதினொராம் திருமுறை 'மதிமலிபுரிசை' என்னும் இறைவன் திருவாக்கை முதலாகக் கொண்டு இறைவன் கலைஞனைப் போற்றிய கருணையைப் பொருளாகத் தொடங்கி நாற்பத்தொரு நூல்களை அடக்கி இறையருளும் அடியார் பெருமையும் அறிவிப்பதாக அமைந்து விள்ங்குவது. பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணமோ அன்புநெறி வளர்க்கும் கருவூலமாகவும், செந்தமிழ் உலகிற்குச் சிறந்த செம்மை சான்ற வரலாற்று நூலாகவும் அமைந்து விளங்குவதையும் அறியக் காணலாம் என்று 'பண்ணிசை வரலாற்றுத் தத்துவம்' என்னும் நூல் விளக்குகிறது.

## தேவாரம்

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்றும் திருஞான சம்பந்தர் இயற்றியவை. நான்கு முதல் ஆறாவது திருமுறைகள் வரையில் உள்ளவை திருநாவுக்கரசு நாயனார் இயற்றியவை. ஏழாவது திருமுறை சுந்தர மூர்த்தி நாயனார் அருளியது. இந்த ஏழுமே 'தேவாரம்' என்றும் 'அடங்கல் முறை' என்னும் வழங்கப்பெறும்.

தேவாரம் என்பதற்குப் பலவிதப் பொருள் உண்டு. அவை தெய்வ அன்பினால் பாடப்பெற்றவை என்று சிலர் கூறுவர். தெய்வத்துக்கு ஆரம் போல் அமைந்தது என்று சொல்லுவோரும் உள்ளனர். 'தே' என்பது தெய்வத்தைக் குறிக்கும் சொல். 'வாரம்' என்பது இசைப்பாட்டு வகையில் ஒன்று. ஔவையார் பாடிய 'தேவர் குறளும், திருநான்மறை முடிவும், மூவர் தமிழும்' என்றும் பாட்டில் 'மூவர் தமிழ்' என்று தேவாரம் குறிப்பிடப்பெற்றமையை உணரலாம்.

தெய்வத் தமிழாகிய மூவர் தமிழ் மூன்று திரட்டு களாகவும் திரட்டப்பட்டுள்ளன. சிவாலய முனிவர் பொருட்டு 25 பதிகங்களைத் தேர்ந்தெடுத்து அகத்திய முனிவர் திரட்டியது 'அகத்தியர், தேவாரத் திரட்டு' என்று பெயர் பெறும். சைவ சித்தாந்தக் கருத்துக் களுக்குச் சான்றாக 99 தேவாரப் பாக்களைக் கொண்டு உமாபதி சிவாசாரியரால் திரட்டப்பட்டது. 'தேவார அருள்முறைத் திரட்டு' என்பதாகும். மூவரும் அருளிச் செய்த அற்புதங்களுக்குரிய பதிகங்கள் அடங்கிய திரட்டு 'அற்புதத் தேவாரத் திரட்டு' எனப் பெறும்.

மூவர் பாடல்களுக்கும் 'தேவாரம்' என்ற பொதுப்பெயர் வழங்கினாலும் ஒவ்வொருவர் இயற்றிய பதிகங்களுக்கும் சிறப்புப் பெயர் முன்னர் இருந்துள்ளது. சம்பந்தர் பதிகங்களுக்குத் 'திருக்கடைக் காப்பு' என்றும், திருநாவுக்கரசர் பதிகங்களுக்குத் 'தேவாரம்' என்றும், சுந்தரர் பதிகங்களுக்குத் 'திருப் பாட்டு' என்றும் பெயர் வழங்கலாயிற்று.

திருஞான சம்பந்தர் 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4,900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும் பாடியருளினார்கள் எனவும், இப்பதிகங் களின் மொத்தத் தொகை 10,300 எனவும் இவற்றின் பாடல்தொகை 1,03,000 எனவும் கூறுவர். ஆனால் எல்லாப் பாடல்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

## தொகுப்பும் வகுப்பும்

தில்லையில் மறைந்து கிடந்த திருமுறைப் பனுவல்களைக் கண்டறிந்தவர் நம்பியாண்டார் நம்பி. அவர் முதன்முதல் அவற்றைக் கண்டபோது, திருமுறைச் சுவடிகள் யாவும் கறையானால் மூடப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் நீக்கிப் பார்த்தபோது பல பதிகங் கள் சிதைந்திருப்பது கண்டு வருத்தம் அடைந்தார். அப்போது 'ஈண்டு வேண்டுவன வைத்தோம்' என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. பிறகு கிடைத்தவற்றை ஒழுங்குபடுத்தித் திருமுறைகள் தொகுக்கப்பட்டன.

பன்னிரு திருமுறையினுள் முதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. முதல் ஏழு முறைகளைத் தேவாரமாக வகுத்துப் பின் மற்றவற்றை நான்காக வகுத்தார். இத்திருமுறைகளை எல்லாம் தொகுப்பித்தவர் 'சிவபாத சேகரர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற முதலாம் இராசராச சோழர்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பியின் 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு 12-ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமான் 'திருத் தொண்டர் புராணம்' எனும் காப்பியத்தை விரித்துரைத் தார். இதன் சிறப்பை உணர்ந்த பெரியோர்கள் இதைப் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்துக் கொண்டனர். இவ்வாறு திருமுறைகள் பன்னிரண்டாயின.

திருமுறைப் பனுவல்களைத் தஞ்சைப் பெரு வுடையார் கோயிலில் ஓதுவதற்கு இராசராச சோழன் விரிவான ஒழுங்குகளைச் செய்து வைத்தான் எனும் செய்தியைச் சாசனம் வாயிலாக அறிகின்றோம். பதிகங் கள் ஓதுவதைத் 'திருப்பதிகம் விண்ணப்பம் செய்வது' என்றும் ஓதுவார் என்பதற்குப் 'பிடாரர்' என்றும், சாசனத்தில் குறிக்கப்பட்டிருப்பதையும் நாம் அறிய லாம்.


முதல் இராசராசனே திருமுறை கண்டவன் என்று சிறப்பிக்கப் பெற்றாலும், அவருக்கு முன்பே திருப்பதிகம் ஓதும் வழக்கு இருந்தது என்பது சாசனங் களால் அறிகின்றோம். மூன்றாம் நந்திவர்மன் காலத் தில் (9-ஆம் நூற்றாண்டு) திருவல்லத்திலும், முதல் பராந்தகன் காலத்தில் (10 -ஆம் நூற்றாண்டு) பழுவூர் அள்ளூரிலும் திருப்பதிகங்கள் ஓதப்பட்டு வந்த செய் தியை அவை கூறுதல் காணலாம்.

தற்போதைய கர்னாடக இசைக்குத் தேவாரப் பண் இசையே மூலமாக விளங்கிற்று. இந்திய இசை வரலாற்றில் தேவாரப் பாடல்களே - ஆதி உருப்படிகளே அணி செய்கின்றன. பாட்டுலகில் தோன்றிய மகான் களில் திருஞான சம்பந்தரே வயதில் மிகவும் இளைய வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமது மூன்றாவது வயதிலேயே 'தோடுடைய செவியன்' என்று பாடியவர் அப்பெருமான்.

## பதிகங்களும் பண்ணும்

முதல் இராசராச சோழனும் நம்பியாண்டார் நம்பியும் தில்லைக் கோயிலை அடைந்து இறைவனிடம் பாசுரங்களுக்கு இன்னிசை அருளுமாறு வேண்ட, "திருநீலகண்ட பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண் ஒருத்திக்கு இசைத்திறனை அளித்துள்ளோம்'' என்று அருள்வாக்கு தோன்றியது. அவ்வகையில் அப்பாடினி யாரைக் கொண்டு தேவாரப் பாசுரங்களுக்குப் பண் வகுக்கப் பெற்றது.

தேவாரச் செழுந்தமிழ்ப் பனுவல்களின் பல இடங்களிலும் இசையின் சிறப்புப் பற்றிப் பேசப்படு வதைக் கொண்டு பண் இசையின் சிறப்பை நாம் அறிய லாம். பண்ணோடு திருமுறை இசைப்பாடல்களைப் பாடினால் அவை கல்மனத்தையும் கரையச் செய்யும். திருத்தருமபுரத்தில் சம்பந்தர் பாடி அருளிய 'யாழ்மூரி' என்னும் பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் தம் யாழில் அமைத்து வாசிக்க இயலாது



சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலில் சித்ராபௌர்ணமியன்று வீரபத்திர மாகாளிக்கு வெற்றிலை மாலை சாற்றிப் பக்தர்கள் வழிபட்ட காட்சி.

யாழை உடைக்கச் சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

விபுலானந்த அடிகள் தம் யாழ் நூலில் திருமுறைகளில் முன்பு காணப்பட்ட மொத்த பண்கள் நூற்று மூன்று என்று குறிப்பிடுகிறார். ஆனால் பெரும்பான்மைப் பண்கள் காலவோட்டத்தில் மறைந்து தற்போது இருபத்தெட்டுப் பண்களே காணக் கிடைக்கிறது. மூவர் பதிகங்களிலும் சம்பந்தரின் திருப்பதிகங்களிலேயே பெரும்பான்மைப் பண்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே தொன்மை இசையின் மூலகர்த்தாவாக ஞானசம்பந்தப் பெருமானே விளங்கினார் என்பது தெளிவாகும்.

பழந்தமிழ்ப் பண்களில் அமைந்த தேவாரப் பாடல்களை இன்றைய இராகங்களில் அவை எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதை ஓதுவா மூர்த்திகளின் துணையோடு சென்னைத் தமிழ் இசைச்சங்கம் மக்களுக்கு உணர்த்தியுள்ளது. மேலும் இச்சங்கம் கடந்த 45 ஆண்டுகளாகப் பண் ஆராய்ச்சிக் கூட்டம் நடத்தித் தேவார இசையைப் பற்றிய சிந்தனைகளையும் மக்கள் நெஞ்சில் விதைத்துள்ளது.

கோயில் சார்ந்த மடங்களில் தேவாரப் பாட சாலைகள் அமைக்கப்பட்டு தேவார ஓதுவார் மரபு காக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், தொண்டை மண்டல ஆதீனம் முதலிய தமிழ் ஆதீனங்கள் மரபு வழியாகத் தேவார இசையை இன்றளவும் காத்தும் கற்பித்தும் வருகின்றன. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தேவார இசை கற்பதற்கென்றே பட்டயப் படிப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சைவசமயக் குரவர்களுள் மூவர் அருளிய இத்திருநெறித் தீந்தமிழ் இசைப் பாடல்களைப் பக்தி உணர்வோடும், பண் முறை வழுவாமலும் நாளும் ஓதி வந்தால், அவ்வப் பதிகங்களின் இறுதியில் கூறப்பட்டுள்ள வாறு பலன்களை உறுதியாய்ப் பெறலாம் என்பது உறுதி.

★★★

# ஸ்ரீ புரந்தரதாஸர்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

பண்டரீபுரத்துக்கு அருகில் வேமன்னபுரி என்றோர் அழகிய சிற்றூர்; நீர்வளம் மிகுந்தது, என்றென்றும் பசுமையாகவே விளங்கும். அவ்வூரில் உள்ள மக்கள் தெய்வபக்தியிலே சிறந்து விளங்கினர். செல்வம் மிகுந்த அந்த ஊரில், 'அருள் செல்வம், பொருள் செல்வம், கலைச் செல்வம், ஞானச் செல்வம்', ஆகிய இன் நான்கையும் ஒருங்கே பெற்ற 'மாதவராவ்' என்ற பெரியார் ஒருவர் இருந்தார். இவர் மனைவி 'இரத்தினா பாய்'. நெடுநாட்களுக்குப் பிறகு இறைவன் அருளால் அவர்களுக்கு ஒரு மைந்தன் தோன்றினான். 'ரகுநாதன்' என்று பெயரிட்டு அருமையும் பெருமையுமாய் வளர்த்தனர். அவன் கல்வி கேள்விகளிலும், இசைக் கலையிலும் வல்லவனாக இருந்தான். அவனுக்கு தக்க வயது வந்ததும், 'லேவாதேவி' என்று கூறும் வட்டிக் கடை வியாபாரத்தில் அமர்த்தி, தம் சுற்றத்தைச் சேர்ந்த 'லக்ஷ்மீபாய்' என்ற அழகிய பெண்ணை, பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.

இல்லறம் தொடங்கிச் சிறந்த முறையிலே நடந்தது. வட்டிக்கடை வளர வளர, ரகுநாதனது பேராசையும், லோபித்தனமும் கூடவே வளரலாயின. பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட ரகுநாதனின் பேராசையால் தெய்வ வழிபாடு, பூஜை, அன்ன தானம் இவைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. வீட்டிலே ஒரே அடக்குமுறை தாண்டவ மாடிற்று. வயிறு நிறைய உணவு கிடைப்பதும் அரிதாயிற்று. எப்பொழுதும் ஒரே தியானம். ''பணம்! பணம்! பணம்! அதில் வட்டி, வட்டிக்கு வட்டி ....'' இப்படி ஓடிக் கொண்டிருந்தன அவன் சிந்தனைகள்! பாவம்! தன் கணவன் லோபித்தனத்தின் முன், ஒன்றும் செய்ய முடியவில்லை; வருந்திக்கண்ணீர் சொரிவதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்? தம் 20ஆம் வயதில் பெற்றோரை இழந்தார் ரகுநாதர். இல் வாழ்க்கை வரண்டு ஓடிக்கொண்டிருந்தது; லக்ஷ்மீபாய் ஓர் அழகிய பெண் குழந்தையை ஈன்றாள். அந்தக் குழந்தைக்கு ருக்மணிபாய் என்று பெயர்.


ஒரு முறை கிழ அந்தணர் ஒருவர் தன் புதல்வனின் (மகனின்) உபநயனத்திற்காக பணம் யாசிக்க வந்தார். ரகுநாதர் பிறகு ஆகட்டும் என்று தட்டிக் கழித்துக் கொண்டே வந்தார். யாசகத்திற்கு வந்தவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவர் ரகுநாதரது மனைவியிடம் கேட்டார். அவர் சிறிதேனும் யோசிக்காமல் தன்னுடைய விலையுயர்ந்த மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்து ''தாங்கள் இதைப் பெற்றுக் கொள்ளவும். இது தங்கள் மகன் உபநயனத்திற்கும் குடும்பச் செலவுக்கும் ஆகும்;'' என்று சொல்லியினுப்பினாள்.

அந்த கிழ அந்தணர் ரகுநாதரிடம் மாறு வேடத்தில் சென்று விற்றுப்பணம் பெற்றுச் சென்றார். அவருக்கு அந்த மூக்குத்தியைப் பார்த்ததும் சந்தேகம் உண்டாயிற்று. உடனே தன் மனைவியின் மூக்குத்தியை வாங்கி வரும் படி தன் கடை ஆளிடம் சொல்லியனுப்பினார். லக்ஷ்மிபாயிடம் அந்த ஆள் வந்து சொன்னதும், அவளுக்குத் திகைப்பும், பயமும் உண்டாயிற்று. இன்னது செய்வதென்றே தோன்றவில்லை? உடனே குல தெய்வமாகிய 'பண்டரீ நாத'ரைத் தியானம் செய்தார். உடனே பண்டரீநாதர் அவர் வேண்டுகோளுக்கிணங்கி அவள் தானம் செய்த மூக்குத்தியைப்போல இன்னுமொன்றை வரச் செய்தார். தேவியாருக்கு இதைப்பார்த்ததும் ஆச்சரியமும், சந்தோஷமும் ஏற்பட்டது. கடவுள் அருளினால் வந்த அந்த மூக்குத்தியை வந்த ஆளிடம் கொடுத்தனுப்பினாள். ரகுநாதர் மனைவி கொடுத்தனுப்பிய மூக்குத்தியையும், அந்தணரிடம் வாங்கிய மூக்குத்தியையும் ஒப்பிட்டுப்பார்த்தார். இரண்டும் ஒன்றாகவே இருக்கக்கண்டு, ஆச்சரியமுற்று மனைவியிடம் ஓடி வந்து, நடந்ததை மறைக்காமல் கூறும்படி கேட்டார். அவளும் நடந்தவைகளை அப்படியே தன் கணவரிடம் கூறினாள்...!

உடனே ரகுநாதருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. 'ஆகா! என்ன மோசம் போனேன்: இத்தனை வருடங்களை வீணாகக் கழித்தேன்' என்று வருத்தமுற்றார். இனியாவது ஸ்ரீபாண்டுரங்கனை பஜனை செய்து, சன்மார்க்கத்தில் காலம் கழித்து வருவோமென்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு, தல யாத்திரைக்காகப் புறப்பட்டார்.

ஞானோதயம் ஏற்பட்ட உடனே இவர் பாடிய பதம், 'மோஸஹோ தெனல்லோ' என்று தொடங்குவதாகும். அடாணா ராகத்தில் அமைந்தது. இந்த பதத்தின் 22வது சரணத்தினின்றும் ''யௌவனதல்லி ஸ்ரீஹரி பத நமப்தே முவ்வத்து வருஷ மோஹப்தி யல்லி,'' என்னும் இந்த பதத்திலிருந்து இவருக்கு முப்பதாவது வயதில் ஞானோ தயம் ஏற்பட்டதை விளக்குகிறது.

ரகுநாதரது மனமாற்றம் நொடிப்பொழுதில் ஊர் முழுவதும் பரவலாயிற்று. எல்லோரும் இறைவனது



கருணையைப் புகழலாயினர். அவருடைய பெட்டி களிலே அடைப்பட்டுக்கிடந்த செல்வக் குவியல்கள் கோயில், குளம், சத்திரம், நந்தவனம், வேத பாடசாலை கள், தத்துவ வியாகரண ஆராய்ச்சிக் கழகங்கள், ஹரிகதா காலட்சேப மண்டபங்கள் இப்படிப் பல்வேறு வகை யாக உருவெடுத்தன. இவைகளுக்கெல்லாம் மணிமுடி போல் பண்டரீபுரத்திலே நாதப்பிரம்ம மடம் என்ற மாளிகையில் எப்பொழுதும் பகவானது திவ்ய நாமங்கள் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

ஏற்கெனவே இசையிலே வல்லவரான ரகு நாதரது நெஞ்சிலே உறங்கிக் கிடந்த சக்திகளை இறைவனது கருணைப் பெருக்கு தட்டி எழுப்பியது. அந்தச் சக்தி இப்பொழுது பீறிட்டெழுந்து இறைவ னுக்குப் பாமாலைகளாக வடிவெடுத்தன.

செல்வத்தை எல்லாம் இறைவன் பணியிலே செலவிட்டு, அந்தணருக்குரிய உஞ்சவிருத்தியை மேற் கொண்டார் ரகுநாதர். அவரோடு அவரது அருமை மகள் ருக்மணியும் பாடலாயினாள். மகளது அழகு, சங்கீத ஞானம், அடக்கம், ஒழுக்கம் இவைகளைப் பார்க்கும் பொழுது இவளுக்கு ஏற்ற வரன் எங்கிருக் கிறானோ என்ற ஏக்கம் லக்ஷ்மீபாயின் நெஞ்சில் எழும்: ஊர் ஜனங்களும், 'மகளுக்குக் கல்யாணம் செய்யாமல் சதா பக்தியில் காலம் கழித்தால், லக்ஷ்மீபாய் தான் என்ன செய்வாள்.' என்று பேசலானார்கள்.

ஒரு நாள் ஒரு கிழவர் வந்து, ''ஏன் ரகுநாதரே! உமது மகளுக்கு மணம் முடிக்க வேண்டாமோ?'' என் றார். ரகுநாதரோ மிகவும் அமைதியாக, ''நான் எல்லா வற்றையும் அவனுடைய திருவடிகளிலேயே அர்ப் பணித்து விட்டேன்; அவன் விட்ட வழி ''என்றார். அவரது உறுதி கிழவரைத் திகைக்கச் செய்தது. பிறகு, ''உன் மகளைப் பார்த்தால் எனக்கு இரக்கம் உண்டா கிறது. உனக்கு ஓர் உதவி செய்ய விரும்புகிறேன். அடுத் துள்ள கிஷ்கிந்தாபுரியில் கேசவராவ் என்று ஒரு செல்வந்தர் இருக்கிறார். அவர் குமாரன் உன் பெண் ருக்மணிக்கு ஏற்றவன். நீ சரி என்றால் இந்த விவாகத்தை நானே முன்நின்று முடித்து வைக்கிறேன்.'' என்றார். ரகுநாதரது மனம் குளிர்ந்தது: இறைவன் இவர் மூல மாக முடிக்கத் திருவுள்ளம் உடையான் போலும் என்று நினைத்து, தம் பக்தியிலும், பஜனையிலும் ஈடு படலானார்.

கிழவர், கிஷ்கிந்தாபுரியில், கேசவராவ் மகனைப் பேசி முடித்து, திருமணத்தை நடக்கும்படி ஏற்பாடு செய்ததை ரகுநாதரிடம் சொல்லி வரச் சென்றார். ரகுநாதர் எந்தக் கவலையும் இன்றி, தம் பஜனைக் கோஷ்டியுடன் தாமே இயற்றிய அற்புதமான கீதங் களைத் தானும் மகளுமாய் பாடுவதையும் கண்ட அவ்வூர் வாசிகள் ஆச்சர்யத் தில் ஆழ்ந்தனர்.

கிழவரோ, ''பேஷ்! பலே! பேஷ்'' என்று ரசித் தார். விவாகம் வெகு சிறப்பாக ஊரே வியக்கும்படி

ஐந்து நாட்கள் நடந்தது. ஊரார் அவரை 'ரகுநாததாஸர்' என்று அழைக்கலானார்கள்.

தென்னாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று திருப்பதி. அங்கு ஏழு மலையான் நின்ற திருக்கோலமாகக் காட்சி தருகின்றான்! திருப்பதி திருத்தலத்திலே வந்து சில நாட்கள் லக்ஷ்மீபாயுடன் தங்கினார் ரகுநாததாஸர். அந்தப் பதியிலே 'புரந்தரி' என்னும் தாஸி, தெய்வபக்தி மிகுந்தவள் என்றும் புகழ் பெற்றிருந்தாள். அவள் இந்த பரம பாகவத தம்பதிகள் பாடிச் செல்வதைக் கண்டு, தன் இல்லத்திலேயே விருந்தினராக இருக்கும்படி வேண்டிக்கொண்டாள். இவரும் அவள் வீட்டிலேயே தங்கலானார். அவ்வாறு தங்கியிருக்கும் பொழுது, தினந் தோறும் நடு இரவில் புரந்தரி அம்மையார், காலில் சதங்கையும், கையில் வீணையுமாய் எங்கேயோ சென்று நெடு நேரம் கழித்துத் திரும்புவதை ரகுநாதர் கண்டார். அந்த அம்மையார் அவ்வாறு நாள் தோறும் எங்கே செல்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்பினார் ரகுநாததாஸர். எனவே ஒரு நாள் புரந்தரியிடம் ''அம்மை யாரே! தாங்கள் நள்ளிரவில் எங்கே செல்கிறீர்கள்? நடனத்துக்குரிய அலங்காரங்களுடன் வீணையையும் எடுத்துக்கொண்டு செல்லுகிறீர்களே, அது எங்கே?'' என்றார்.

புரந்தரி உண்மையைச் சொல்லத் தயங்கினாள்; பிறகு பரமபக்தரான அவரிடம் மறைக்கக் கூடாது என்று எண்ணி, ''சுவாமி! நான் தினந்தோறும் கோயிலுக்குத் தான் செல்லுகிறேன்! இறைவன் எனக்காகக் கதவைத் திறந்து வைத்திருப்பான்! நான் நடனமாட இறைவன் வீணை வாசிப்பார்; பிறகு நான் வீணை வாசிக்க அவர் நடனமாடுவார்! இது, வேறு ஒருவருக்கும் தெரியாது; எங்கள் இருவருக்குமே தெரியும். உங்க ளிடம் நான் மறைக்க விரும்பவில்லை. ஆகவே உண்மை யைச் சொன்னேன்'', என்றாள்.

புரந்தரியின் சொற்களைக் கேட்டு ரகுநாத தாஸர் மிகவும், ஆச்சரியமடைந்து, தனக்குக் கடவுளின் தரி சனமும், நற்கதியும் கிடைக்க வேண்டும் என்று நினைத் தார்.

''அப்படியா?! இன்றிரவு தாங்கள் என்னையும் அழைத்துச் செல்ல வேண்டும். எம்பெருமான் ஆடும் நடனத்தைக் காணவும், அவரது வீணா கானத்தைக் கேட்கவும் என் மனம் துடிதுடிக்கிறது. தாங்கள் எனக்குக் கட்டாயம் இவ்வுதவியைச் செய்துதான் தீர வேண்டும்,'' என்று சொன்னார்.

அவளால் இவரது வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. எனவே அவள் அன்றிரவு ரகுநாத தாஸரைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஒரு தூண் மறைவில் இருக்கச் செய்தாள். தான் மட்டும் தனியே பகவானுடன் ஆடவும் பாடவும் சென்றாள்.

வழக்கம் போல முதலில் புரந்தரி பாடலானாள். இறைவன் அவளது வீணை இசைக்கும் குரல் ஒலிக் கும் இசைய, நடனம் ஆடினான். ரகுநாதரோ சங்கீத நிபுணர்; எனவே அவர் புரந்தரியின் பாடலிலே மெய் மறந்து தாளம் போட்டுக்கொண்டிருந்தார். பகவானும், ரகுநாததாஸருக்கு அருள் செய்ய விரும்பினான். ஆகவே அவளது பாட்டு முடிந்ததும், தான் வீணையை எடுத்து மறுபடி ஸ்ருதி சேர்த்து மிகவும் அபஸ்வர மாக வாசித்துப் பாடலானார். இந்த அபஸ்வரத்தைப் பொறுக்க முடியாத ரகுநாதர், ''ஏ, புரந்தரி! இதென்ன அபஸ்வரம்? தலைவெடித்துப்போகும் போலிருக் கிறதே.'' என்று எழுந்து வந்தார்.

பகவானும் உள்ளம் உவந்து அவரை அழைத் தான். மூலப் பழமறைக்கு முன்னேயும், பசுக்கூட்டத் திற்குப் பின்னேயும் செல்லும் இறைவன், ரகுநாதருக்கு எதிரில் நின்றான். ரகுநாததாஸர் மெய் மறந்தார்!'' இறைவனே! ஆண்டவனே! உமது திருவருள் இருந்த வாறுதான் என்னே! நான் பலகாலும் உருகி வழிபட்ட தெல்லாம் இன்றே பலன் தந்தது.'' என்று அவருடைய திருவடி களிலே வீழ்ந்து வணங்கினார். இறைவன் அவரைப் புரந்தரியிடமே ஞானோபதேசம் பெறச் செய்து, 'புரந்தர தாஸன்' என்று பெயர் பெற்று, பாகவத கோஷ்டியிலே விளங்க அருள் செய்து மறைந்து போனார்.

சில காலம் தல யாத்திரை மேற்கொண்டார். அநேக திவ்யத்தலங்களுக்குச் சென்று, சுவாமி தரிசனம் செய்து கடைசியாக அவர் பண்டரீபுரத்திற்கு வந்து சேர்ந்தார்.

வீட்டை அடைந்த புரந்தரதாஸருக்குச் சோதனை காத்து நின்றது. தையல் வேலையில் இருந்த சமயம், இவர் மகள் வயதுக்கு வந்து விட்டதையும், அதன் பின் சாந்தி முகூர்த்தம் செய்ய வேண்டியதையும் இவரிடம் சொல்ல வந்தனர். அது சமயம் லக்ஷ்மீபாயுக்குக் கையில் ஊசி குத்தியதில், அவர்கள், 'கணவர் எங்கே' என்றதற்கு, ''பண்டரீ நாதனுக்கு அழப்போயிருக் கிறார்'', என்று சொன்னாள். அதைக் கேட்ட அந்த மனிதர், பெண்ணின் மாமனாரான கேசவராவிடம் சென்று, ''ஒன்றும் சீர்வரிசை வராது'', எனச் சொன்னார்.

அதே நேரம் கிழவேடம் கொண்டு சென்ற பகவான், இவர் மகள் ருக்மணிபாய் வீடு சென்று, அவள் மாமனாரிடம் கேட்டு, அவர்கள் நீட்டிய பட்டிய லின்படி வீட்டையே நிரப்பினார். அவர்களும் மனம் மகிழ்ந்து சாந்திகல்யாண வைபவங்களை சிறப்பாக நடத்தினர்.

அங்கே நடைபெற்றவைகளை வேமன்னபுரி மக்கள் அதிசயித்துச் சொன்னவைகளைக் கேட்டு புரந்தர தாஸர், 'நமக்காக இறைவன் மீண்டும் வந்து சிரமப்

டும்படி நடந்து கொண்டோமே', என்று பிழை பொறுக்க ஆண்டவனை இறைஞ்சினார்.

இதன் பின் ஒரு சமயம் இசைப்பயிற்சி கைவராத லை பக்தர்களை இவர் அலட்சியமாய் பேச, அதன் பயனாக இவர் 'ஊமை'யாய் விட்டார். 'இறைவனுக்கு அபசாரம் செய்வதை விட அவனுடைய தொண்டனுக்கு அபசாரம் செய்வது கொடிது' என்று அறிந்து வருந்திய பின் பேச முடிந்தது.

இதன் பின் 'அப்பண்ணா' என்ற சீடனை இவர் நெய் வாங்கிவர அனுப்ப, அதனைச் சுங்கச்சாவடியார் பறித்துக்கொள்ள, இறைவனே நெய் குடம் தூக்கி வந்த அற்புதம் நிகழ்ந்தது.

வித்தையும் பக்தியும் இருந்தன; ஞானோப தேசமும், ஆயிற்று. ஆனால் தான் என்ற அகம்பாவம் உண்டாயிற்று. 'தான் சங்கீத நிபுணன்; தான் ஒழுக்கத் தால் உயர்ந்தவன்' என்ற கர்வம் அவருக்கு நிறைந் திருந்தது. சீடர்களைக் குட்டுவதும், திட்டுவதும், பரிகசிப்பதும், பிறருக்கு மனத்தாங்கல் உண்டு பண்ணின.

இவரது கர்வத்தை ஒடுக்க இறைவன் ஒருநாள் தன் கைக்காப்புகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு, புரந்தரதாஸர் போல வேடம் தரித்து பண்டரீபுரத்தில் வசித்த புனிதவதியான 'லீலாவதி' என்னும் தேவதாசி வீட்டிற்குப் போய் அவளிடம் ஆசை கொண்டு வந் திருப்பதாகச் சொன்னார். புரந்தரதாஸருடைய பெயரை யும் புகழையும், 'கான'த்தையும் கேட்டிருந்த அவள் மிகவும் தயக்கத்துடன், ''சுவாமி! என் வீட்டிற்குத் தாங்கள் வந்தீர்கள் என்ற அவப்பெயரை உங்களுக்கு உண்டாக்க விரும்பவில்லை, எழுந்து போம்'', என் றாள். ''சரி; போனாற் போகட்டும். உன்னைப் பார்த்ததே போதும், அவ்வளவாவது கிடைத்ததே சந்தோஷம்! இதைப் பெற்றுக் கொள்'', என்று 'பொற் காப்பை' அளித்துப் போனார் புரந்தரதாசர் வடிவில் இருந்த இறைவன்.

மறுநாள் அர்ச்சகர் பொற்காப்பைக் காணாமல் அரசனிடம் தெரிவிக்க, அரசனும் ஊர் முழுவதும் தமுக்குப் போடச் சொன்னான். லீலாவதி கோயில் உடைமை என்றறிந்து அதை அரசன் சபைக்கு எடுத்துச் சென்று, புரந்தர தாஸர்தான் கொடுத்தார் என்று கூறிக் கொடுத்தாள். அரசனது காவலாட்கள் புரந்தரதாஸரைப் பற்றி இழுத்துக்கொண்டு வந்தனர்.

புரந்தரதாஸரோ, ''தாம் பண்டரீபுரம் வரவே யில்லை, லீலாவதியைக் கண்டதேயில்லை,' என்று ஆன மட்டும் சொன்னார். ஆனால் லீலாவதியோ, ''இவரேதான் வந்தவர்'' எனக் கூற வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசனும் ''பக்தர் என்ற காரணத்தால் முப்பது கசையடிகள்'' என்றான்.

''பகவத் அபசாரம் பாகவத அபசாரம் நிறையச் செய்தோம். நமக்கு இது வேண்டியது தான்,'' என்று சொல்லிக்கொண்டார் புரந்தரதாஸர்.

அப்பொழுது இறைவன் அசரீரியாக, ''ஏ! அரசனே! காப்பை யார் திருடியது என்று கண்டுபிடிக்க இயலவில்லையே! கோயில் பூட்டியபடி இருக்க எவர் எடுக்க முடியும்? கதவு பூட்டியபடியே இருந்தது என்பதை உன்னிடம் அர்ச்சகர் சொல்லவில்லையோ? புரந்தரரின் பெருமையை உலகம் அறியவும். அவ ருக்குத் தண்டனை அளித்து ஆட்கொள்ளவுமே இப்படி சூழ்ச்சி செய்தேன். அவ்விடம் சாந்தமும், சமத்துவ பாவமும் இல்லை, கர்வமும் அகம்பாவமும் போகவே அவருக்கு இந்தத்தண்டனை, சிஷ்யராக வந்தவர்களையெல்லாம் குட்டியும், அடித்தும் அபசாரத் துக்கு உள்ளானார். தொண்டர் குலம் ஒரே குலம் என்பதை அவர் உணரட்டும்'', என்று கூறினார்.

புரந்தரருக்கு அப்பொழுதே மெய்ஞ்ஞானம் உதித்தது. இறைவனது திருவருளை வியந்து வியந்து அற்புதமான ஒலிமாலைகளைத் தொடுத்தார். இவ ருடைய இசை மாலைகளை 'தாஸர்வாள் பதம்' என்றும் 'தேவர் நாமோ' என்றும் போற்றிப் புகழுகின்றன, சங்கீத உலகமும் பக்தி உலகமும்...!

வேதங்களிலும், உபநிஷதங்களிலும் இதிகாசங் களிலும் உள்ள தத்துவ விஷயங்களைப் பொது ஜனங்கள் அறிந்து மோட்க்ஷத்தை அடைய வேண்டும் என்னும் நோக்கத்துடன் பக்தி ரசம் ததும்பும் பதங்களை தாஸ ரவர்கள் செய்ய ஆரம்பித்தார்.

கர்நாடக சங்கீதத்திற்கு புத்துயிர் அளித்த இம் மகானுக்கு, 'கர்நாடக சங்கீத பிதாமகர்' என்னும் பட்டம் ஏற்பட்டது.

இவர் இயற்றிய பதங்கள் தற்காலத்தில் 'கச்சேரி களிலும், பஜனைமடங்களிலும், தேவாலயங்களிலும்' கேட்கலாம். ஆயிரக்கணக்கான உருப்படிகளை இயற்றி யுள்ள மகான்களில் இவர் முதன்மையானவர். பிரசித்தி யான ராகங்களிலும், சாமான்ய ராகங்களிலும், 'மாஞ்சி, பைரவி, த்விஜாவந்தி, ச்யாம கல்யாணி, வசந்த பைரவி', போன்ற அபூர்வராகங்களிலும் இவர் உருப்படிகளை இயற்றியுள்ளர். இவரது காலம் 15ம் நூற்றாண்டு *(1484-1516)* ஆகும். கடைசி காலத்தில் சன்யாச ஆசரமத்தை பெற்றார். 1516ம் ஆண்டு, ஜனவரி மாதம், 2ம் தேதி, இம்மண்ணுல வாழ்வை நீத்து இறையடி சேர்ந்தார்.

ஸ்ரீபுரந்தரதாஸர், 'நாரதரின்' அம்சமென்று பெரியோர்கள் கூறுவர். ஸ்ரீ தியாகப் பிரம்ம சுவாமிகள் இவரைப் புகழ்ந்து 'பரஹ்லாத பக்தி விஜயம்' என்ற நாடகத்தில் எழுதியிருக்கிறார்!

★★

# குசேலரும் கண்ணனும்

– புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ., பி.எட்

ஸ்ரீதாமன் என்பது குசேலரது இயற்பெயராகும். இவர் வறுமையில் வாடி கிழிந்த ஆடைகளை அணிந் திருந்தமையால் குசேலர் என்று வழங்கப்பட்டார். அவர் காலத்தில் ஸ்ரீமந் நாராயணன் கண்ணனாக அவதாரம் செய்தார். தாமரை மலர் போன்ற அழகிய கண்களைப் பெற்றிருந்தமையால் தாமரைக் கண்ணன், கமலக் கண்ணன் என்று அழைக்கப்பட்டான். இவன் தன் பெற்றோர்களுக்கும், ஆயர்களுக்கும் கண்களைப் போன்றவனாக விளங்கியமையால் கண்ணன் என்று அழைக்கப்பட்டான்.

## குருகுலக் கல்வி

கண்ணனும் குசேலனும் இளமையில் சாந்திப முனிவரிடம் ஆசிரமத்தில் தங்கி குருகுலக் கல்வி கற்ற னர். இறைவனான கண்ணனும், பிறப்பிலேயே மெய் யறிவு பெற்ற குசேலனும் நண்பராயினர். முனிவரும், அவரது மனைவியும் இருவர் பாலும் பேரன்பு கொண் டிருந்தனர். குசேலனும் கண்ணனும் அவர்களைப் பெற் றோர் எனக் கருதி, வேண்டிய உதவிகள் எல்லாம் செய்து வழிபட்டு வந்தனர். குருவின் பெருமையை உணர்ந்த கண்ணன், குருவிற்குப் பணிவிடை செய்து கல்வி கற்றான்.

குருகுலக் கல்வி முடிந்ததும் கண்ணனும் குசேல னும் பிரியா விடைபெற்றுப் பிரிய வேண்டிய சூழ் நிலைக்கு ஆளாயினர். குருவும் குருவின் மனைவியும் இவர்களைப் பிரிய மனமின்றி பாசத்தால் பெரிதும் துன்புற்றனர். இதனையே,

''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்''

என்றார் வள்ளுவர்.

## குசேலரது இல்லற வாழ்வு

குசேலன் கல்வி கேள்விகளிலும், சிறந்த பல பண்புகளிலும் இறை பக்தியிலும் சிறந்து விளங்கினான். பருவம் அடைந்ததும் நற்குணங்கள் நிறைந்த சுசீலை என்ற மங்கையை மணர்ந்தார். சுசீலை அன்பும், அற மும், நற்பண்பும், பதி பக்தியும், இறை பக்தியும், விருந்தோம்பலும் ஆகிய பல பண்புகளைப் பெற்று மாதர் குல மாணிக்கமாகத் திகழ்ந்தாள்.

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்றபடி வள்ளுவர் கண்ட வாசுகியைப் போல் திகழ் தாள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தம்பதிகள் இரு வரிடையே பண்பிற்குப் பஞ்சம் இல்லையென்றாலும் பொருட் செல்வத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டது.

''இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

என்ற குறட்பாவிற்கிணங்க வறுமையால் வாடினர் வறுமையில் வாடின போதிலும் நெறி தவறாமல் வாழ்ந்தனர். பிள்ளைகளோ இருபத்து ஏழு பேர் கவலைக்கு கேட்கவா வேண்டும். பசியும், பட்டினியும் பஞ்சமும் தலை தூக்கியது. அந்நிலையிலும் சுசீலை கிடைத்த பொருளைக் கொண்டு கணவரையும் பிள்ளை களையும் உபசரித்து தான் சிறிதே உண்டு காலம் கழித்து வந்தாள். இருவரும் ''வறுமையிலும் செம்மை'' காத்து வந்தனர். இந்நிலையிலும் குசேலர் திருமாலை எக் காலமும் தியானித்து வருவதில் தவறியதில்லை.

என்றாலும் ''பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்ற அளவில் எல்லையற்ற துன்பங்களை அடைந்தனர்.

## குசேலர் துவாரகைப் பயணம்

ஒரு நாள் சுசீலை குசேலரிடம் அவர்கள் வறுமை நிலையினை நினைவூட்டி, அவரது உயிர் நண்பன் கண்ணனிடம் சென்று சற்றே பொருள் பெற்று வரும்படி வேண்டினாள். குசேலருக்கு முழுமையாக விருப்பம் இல்லையென்றாலும், நிலைமையைச் சமாளிக்க துவாரகை புறப்பட இசைந்தார். பெரியவர்களைக் காணச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக் கூடாது என்பதை உணர்ந்த சுசீலை தமது வீட்டில் உள்ள தானியத்தைப் பக்குவமாக வறுத்து அவல் இடித்துக் கொடுத்தாள்.

குசேலர் அந்த அவலைத் தனது கிழிந்த ஆடை யில் முடிந்துகொண்டு துவாரைகைக்குப் புறப்பட்டார். நீண்ட நாட்களுக்குப் பின் கண்ணனைக் காணச் செல் வதால் நடந்து செல்லும் களைப்பையும் மறந்து

சென்றார். எப்படியோ தள்ளாடி நடந்து துவாரகையை அடைந்து கண்ணன் அரண்மனையைச் சேர்ந்தார். வாயில் காவலர்களிடம் தான் கண்ணனைக் காண வேண்டுமென்று தெரிவித்தார். குசேலரது எளிய உருவத்தையும், கிழிந்த ஆடைகளையும் கண்ட காவலர் மறுத்தனர். ஆனால் அவர்களில் ஒரு காவலர் குசேலர் மீது இரக்கப்பட்டு கண்ணனிடம் சென்று அறிவித்தார்.

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும்'' என்ற முதுமொழி இங்கு நோக்கத் தக்கது.

**கண்ணன் குசேலரை வரவேற்றல்**

குசேலது வருகையைக் கேட்ட கண்ணன், தாயின் வருகையைக் கேட்ட குழந்தை எவ்வளவு இன்பம் அடையுமோ அதைப்போல பெரிதும் மகிழ்ந்தான். உடனே சென்று குசேலரை அழைத்து வரும்படி ஆணை யிட்டான்.

''தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போலே
நேயம் மிக்கு டையனாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத்திடுமின் இன்னே''

(குசேலாபாக்கியானம்)

காவலர் சென்று குசேலரை அழைத்து வந்தனர். குசேலர் தூரத்தில் வரும்போதே, கண்ணன் தனது இருக்கையில் இருந்து எழுந்து நீர் தேக்கி வைக்கப்பட்ட அணை உடைந்தால் வேகமாகச் செல்லும் வெள்ளத்தைப் போல மிகவும் வேகமாக ஓடிச்சென்று, பேரன்பு பொங்க மாதவம் மிக்க குசேலரது திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

''காண்டலும் உவகை பூத்துக் கால்விசை
கொடு நடந்தான்
ஆண்டகை அவனுங் கண்ணுற்று அணையுடைந்தெழு
நீத்தம் போல்
நீண்ட பூம்பள்ளி நீத்து நிலவு பேரன்பு பொங்க
பூண்ட மாதவன் முன்சென்று பொன்னடி
வணங்கினானே!''

(குசேலாபாக்கியானம்)

கண்ணன் தனது எட்டு உறுப்புகளும் பூமியில் படியும்படியாக குசேலரது திருவடிகளில் விழுந்து வணங்கினான். இவ்வாறு கண்ணன் வணங்கியதால், குசேலர் சான்றோர்களுக்கு எல்லாம் தலைவர் என்பதையும், உலகோர் உணர்ந்து போற்றும்படிச் செய்தான்.

''திலகம் மண்தோய ஐயன் திருவடி வணங்கிப் பின்னர்
குலமுறைத் தலைவன் என்றும் கூர்ந்த மெய்
நட்பன் என்றும்
மலர்தலை உலகம் போற்றும் வாய்மை காத்த
ருளினானே!

(குசேலாபாக்கியானம்)

**குசேலர் - கண்ணன் நட்பின் பெருமை**

பெரியவர்களாகிய சான்றோர்களின் நட்பானது வளர்பிறையைப் போன்று நாளும் வளர்ந்து பல நன்மைகளைத் தரும். அதைப்போல குசேலர் கண்ணன் நட்பு வளர்ந்தது.

''பெரியவர் கேண்மை பிறை போல நாளும்
வரிசை வரிசையாய் நந்தும்''

உலகில் பேயினுடைய நட்பினை ஒருவர் பெற்றிருந்தாலும் பிரிவதும் மிகவும் துன்பம் தரக்கூடியதாகும் என்று தூய்மையான சான்றோர்கள் கூறுவர். அத்தகைய சான்றோர்கள் புகழக்கூடிய தூயோர்களின் நட்பை, பெருந்தவப்பயனால் தான் அடையமுடியும். எளிதில் ஒருவருக்குக் கிடைக்குமானால் புகழுடைய பெரியோர்கள் தள்ளிவிடுவார்களா? தள்ளமாட்டார்கள். அப்படியே மறையனைத்தும் உணர்ந்த குசேலரது நட்பு எளிதில் கிடைத்தபோது தள்ளிவிடாமல் ஏற்று மகிழ்ந்தான் கண்ணன்.

''பேயோடு பழுகுறினும் பிரிவது அரிதரி தென்று
தூயோர்கள் மொழிவரேல் தூயோரும் புகழ் தூயோர்
ஆயோர்கள் பெருநட்பை அருந்தவத்தால் பெறலன்றி
ஏயோ எண்மையிற் கிடைப்பின் இகழ்வரோ
இகழ்வில்லார்''

ஒருவர் பொன்னையும், பூமியையும், புத்தியையும் பெற்றிருந்த போதிலும், சான்றோர்கள் நட்பினைப் பெற்றிருக்க வில்லையென்றால் அவையனைத்தையும் பெற்றதனால் யாதொரு பயனுமில்லை. அது போலவே பொன்னையும், பூமியையும் புத்தியையும் ஒருவன் பெற்றிருக்கவில்லை யென்றாலும் சான்றோர்கள் நட்பினைப் பெற்றிருந்தால் அனைத்தையும் பெற்றுவிடுவர்.

''பொன்னுள்ளான் பூமியுள்ளான் புத்தியுள்ளான்
ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன் இருந்தவர்தம் நட்பிலனேல்
பொன்னில்லான் பூமியில்லான் புத்தியில்லான்
ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன் இருந்தவர்தம்
நட்புளனேல்''

(குசேலாபாக்கியானம்)

★★★

இத்தகைய சிறப்பு வாய்ந்த குசேலரது நட்பைப் பெற்ற கண்ணன் பெரிதும் மகிழ்ந்தான்.

## குசேலரது வருகைக்கு கண்ணன் மகிழ்தல்

சான்றோராகிய குசேலரது வருகையினால் கண்ணன் திருமாளிகை பெரும்பேறு பெற்றது.

''பாததுளி படுதலால் பாக்கியம் செய்ததிப் பூமியே''

கண்ணனும் பெரிதும் மகிழ்ந்தான். கண்ணன் குசேலரை இருக்கையில் அமர்த்தி, அவரது திருவடிகளை அலம்பி மலரிட்டு வணங்கினான். குசேலரை நீராட்டி புத்தாடை அணிவித்து, அறுசுவை உண்டி அளித்து உபசரித்தான்.

பின்பு கண்ணன் குசேலரை நோக்கி, வேதங்களை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பெருந்தவத்தோரே! உம்முடைய வருகையால் என் உடம்பு பூரித்தது. ஒளி பொருந்திய தேவருலக தேவர்களும், மண்ணுலகில் மன்னர்களும் இதுவரை பெறாததும், இனிபெற முடியாததும் ஆகிய பெரிய பேற்றினை உம் வருகையால் யான் பெற்றேன்.

''மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணர்ந்த
மாதவனே
உன்னுடைய தரிசனத்தால் உடம்பு பூரித்தனன்யான்
மின்னுடைய விளக்கொளிபோல் வேந்தருள்ளும்
தேவருள்ளும்
என்னடைய பெறலரும்பேறு யார் பெற்றார்/
யார் பெறுவார்?

(குசேலாபாக்கியானம்)

## குசேலரது நலம் விசாரித்தல்

கண்ணன் குசேலரை நோக்கி, உம்முடைய மனைவி நல்ல குணங்களை உடையவளா? உன்னுடைய வருவாய்க்குத் தக்க செலவு செய்யக்கூடியவளா? நீர் எத்தனை பிள்ளைகளைப் பெற்றீர்? அவர்களுக்கு உபநயனம் செய்தீரா? என்று பலவாறு விசாரித்தான்.

''நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெறு
நீர்மையளோ?
உன்னுடைய வருவாய்க்குத் தக்க செலவு
உஞற்றுவளோ?
''எத்தனை பிள்ளைகளைப் பெற்றீர்? ஆங்கவர்க்குச்
செய்தனையோ உபநயனம்?

(குசேலாபாக்கியானம்)

கண்ணன் குசேலரை உபசரிக்கும் முறையையும் அன்பையும் கண்ட அனைவரும் பேராச்சரியம் அடைந்தனர்.

## அவல் கொடை

கண்ணன் குசேலரது கந்தல் ஆடையில் முடியப்பட்ட அவல் மூட்டையைக் கண்டான். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் குசேலரை நோக்கி, இவ்வளவு நாட்கள் கழித்து என்னைக் காண வந்தீர்! எனக்கு என்ன கொண்டு வந்தீர் எனக் கேட்டான். குசேலர் தான் கொண்டு வந்த எளிய அவலினைக் கண்ணனிடம் கொடுத்தார். குசேலர் கண்ணனை நோக்கி, இனிய பாலை உண்ணக்கூடிய உனக்கு புளித்த நீரைக் கொடுத்து அருந்து என்று சொல்வது போல, அறுசுவை உணவை உண்ணக்கூடிய உனக்கு எளிய அவலைக் கொடுத்துள்ளேன் என்று கூறி வெட்கப்பட்டார்.

''பொருத்த இன்பால் உண்பான் பால்
புளித்த காடியைக் கொடுத்திட்டு
அருந்திடு என்று உரைத்தற் போலும்
இவ்வவல் கொடை''

(குசேலாபாக்கியானம்)

கண்ணனுக்கோ அவல் என்றால் மிகவும் பிடிக்கும். அதுவும் குசேலர் அன்புடன் கொண்டு வந்த அவல் மற்றும் அவ்வவல் சுசீலையால் முனை முறியாதபடியும், பாலும் வெல்லமும் கலக்க வேண்டிய அவசியமில்லாதபடியும், இனிய சுவையுடையதாகப் பக்குவமாக இடித்து தயாரிக்கப்பட்ட அவல்.

''ஒப்புடன் முகமலர்ந்து உப்பில்லாக் கூழிட்டாலும்
உண்பதே அமுதமாகும்''

என்பதற்கிணங்க குசேலர் அன்புடன் கொண்டுவந்த அவலில் ஒரு பிடியை எடுத்து உண்டான். அதன் இனிமையைக் கண்டு பெரிதும் இன்பம் அடைந்தான்.

## குசேலரது வறுமை நீங்குதல்

குசேலரைப் பார்த்தவுடனே கண்ணன் அவரது வறுமையினை உணர்ந்து கொண்டார். அவர் பொருள் வேண்டி வந்துள்ளதையும் உணர்ந்தார். அவரது வறுமையைப் போக்க நினைத்தார். ஒரு பிடி அவல் தின்றவுடனே குசேலரது குடிசை மாளிகையாக மாறியது. அவர் மனைவியும் மக்களும் நல்ல ஆடைகளையும் ஆபரணங்களையும் பெற்றனர். எங்கும் பலவிதமான செல்வங்கள் குவிந்தன.

ஆனால் குசேலரோ கண்ணனைக் கண்டதையும், கண்ணனால் தழுவப்பட்டதையும், உபசரிக்கப்பட்டதையுமே பெரும் பாக்கியமாகக் கருதினார். எனவே அழியக்கூடிய பொருள் செல்வத்தை வேண்டினார் இல்லை.

## வாசகர் எண்ணங்கள்

63 நாயன்மார்கள் மகேசுவரப் பூஜையின் மகத்துவத்தை நமக்குப் பெரியபுராணம் வாயிலாக உணர்த்தியுள்ளார்கள். அத்தகைய மகேசுவரப் பூஜையாம் அன்னதானத் திட்டத்தைத் திருக்கோயில்களில் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

- ''சிறுகதைச் சித்தர்''. ஏ.வி. இராஜகோபால்,
வளசரவாக்கம், சென்னை.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''. எனும் பொன்மொழியைப் பொன்னெனப் போற்றி திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் அருமையான திட்டத்தை ஆர்வமுடன் செயற்படுத்தும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினை மனமார வாழ்த்துகின்றேன். அன்னதான அறப்பணி நாளும் நாளும் தழைப்பதாகுக!

- கவிஞர் ராஜேஸ்வரி விசுவநாதன்,
சென்னை - 82.

### குசேலர் பிரியா விடை

குசேலருக்கு கண்ணனுடன் இருந்த நாட்கள் பேரானந்தமாக இருந்தன. எனினும் வீடு திரும்ப வேண்டியதால் பிரியாவிடை பெற்றுத் திரும்பினார். குசேலர் நடுவழியில் தான் வந்த காரியத்தை நினைத்துக் கொண்டார். நாம்தான் கேட்கவில்லையென்றாலும் கண்ணனாவது கொடுத்திருக்கலாமே? பொருள் கொடுத்தால் மனம் மாறி பகவத் பக்தி குறைந்துவிடும் என்று கண்ணன் கருதினானோ? என்றெல்லாம் நினைத்துக் கொண்டே வீடு திரும்பினார்.

### குசேலர் வீடு சேர்தல்

குசேலர் தமது ஊரை அடைந்து குடிசை இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே குடிசையைக் காணவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக பெரிய மாளிகை இருக்கக் கண்டு திகைத்தார். இதற்குள் அவரது மனைவியும், மக்களும் பட்டாடையும் பல விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்து வந்து குசேலரை வரவேற்றனர். குசேலரது உடல் கண்ணனைத் தழுவியதால் பொன்னிறமாகத் திகழ்ந்தது. அனைவரும் குசேலரை அடிபணிந்து வரவேற்று உபசரித்தனர்.

### இறுதி வாழ்க்கை

குசேலர் கண்ணனைக் கண்டு வந்ததிலிருந்து ஸ்ரீமந்நாராயணன்பால் பெரும் பக்தி கொண்டு வழிபட்டு வந்தார்.

''நின்னையே தான் வேண்டி நீள் செல்வம்
வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் -
மாயத்தால்
நின்னையே நான்வேண்டி நிற்பன் அடியேனே!''

என்ற குலசேகரர் பாசுரத்திற்கிணங்க, தான் விரும்பாத செல்வம் தன்னை வந்தடைந்த போதிலும் அதற்கு அடிமையாகாமல் பகவத் பக்தியிலேயே ஈடுபட்டு காலம் கழித்தார். இறைவன் அருளால் பரமபத பேரின்ப நாடு எய்தினார்.


### குசேலர் வாழ்வு காட்டும் செம்பொருள்கள்

1. எத்துணை அறிவு பெற்றிருந்தாலும் குருவிடம் பாடம் கேட்க வேண்டும்.
2. நமது வாழ்வில் நல்லோர் நட்பைப் பெற வேண்டும்.
3. வறுமையில் தவறான வழிகளைப் பின்பற்றாது நேர்மையைக் கடைபிடிக்க வேண்டும்.
4. எத்தகைய துன்பத்திலும் பகவத் - பாகவத பக்தி செய்ய வேண்டும்.
5. நல்லோர் நட்பு விரைவில் வளர்ந்து நல்ல பல நன்மைகளைத் தரும்.
6. எளிய உருவத்தைக் கண்டு யாரையும் இகழக் கூடாது.
7. குசேலரைப் போல நாமும் ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது நலமந்தமில்லாதோர் நாடடைய வேண்டும்.

அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!
சடகோபன் தண்தமிழ் நூல்வாழ! - கடல்சூழ்ந்த
மண்ணுலகம் வாழ! மணவாள மாமுனியே!
இன்னமொரு நூற்றாண் டிரும்!


நித்ய ஸ்ரீ - நித்ய மங்களம்

★★★



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், கிராமப் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 500க்கான காசோலையை வழங்குகிறார்கள்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ''ஒவ்வொரு மாதமும் தம் சம்பளப் பணத்தை ஒவ்வொரு திருக்கோயிலுக்கு அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்குவேன்'' என அறிவித்து உள்ளார்கள். தமது மார்ச் மாத சம்பளத்தைத் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு நன்கொடையாக அத்திருக்கோயிலின் இணை ஆணையாளர் – செயல் அலுவலர் திருமிகு இராஜநாயகம் அவர்களிடம் வழங்குகிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.